மானிட மணிகளே, புருஷ சுக்தாவில் கற்பிக்கப்பட்டுள்ள வருண அடிப்படையிலான சமத்துவமின்மையைப் போற்றுகின்ற இந்து சாஸ்திரங்களைப் பின்பற்றப் போகிறீர்களா? அவ்வாறு பின்பற்றுவதன் மூலம் சமூகத்தில் உள்ள சமத்துவமின்மைக்கு மகுடத்தினைச் சூட்டப்போகிறீர்களா? அல்லது அரசில் அமைப்புச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலான கோட்பாடுகளின்படி நீங்கள் நடக்கப் போகிறீர்களா? அவ்வாறு நடப்பதன் மூலம் ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்ற அநீதியைக் கற்பிக்கும் இந்து சாத்திரங்களை நீங்கள் எதிர்க்கப் போகிறீர்களா?

- அண்ணல் அம்பேத்கர்

# வடு

இதழ்: 22 மார்ச் - 2015 விலை: ரூ 20/-

වඩු -VADU

சாதிய 'வடு' அகற்றிடத் துணிந்த தொடரும் பயணம் இது..!



## மீரியபெத்தை

வெளியீடு: இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி - பிரான்ஸ்



# 'வடு' வின் பார்வையில்

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி அதிகார மாற்றமானது பூகோள அரசியல் அதிகார சக்திகளின் விருப்பு வெறுப்புகளின் நிமித்தம் தீர்மானிக்கப்படுவதான நிலமை துலங்கியது. இதுகுறித்த உண்மைகள், ஆய்வுகள் என்பதற்கு அப்பால் இலங்கை தேசத்தின் நலனுக்கும், அங்கு வாழும் சிறுபான்மை இனங்களுக்கும் கடந்த ஆட்சியின் நீட்சி சாதகமானதா? இது குறித்த ஒரு சந்தேகத்தை எமது 20வது 'வடு' வில் இவ்வாறு பதிவு செய்திருந்தோம்." ...தற்போதைய அரசின் செயல்பாடுகள் மீதான அதிருப்திகளும், குற்றச்சாட்டுகளும் அதிகரித்து வருகின்றன. இடம் பெறும் சிறுபான்மை மக்கள் மீதான வன்முறைகள், ஊழல்கள் போன்றவற்றிற்கு எதிரான அரசின் நடவடிக்கைகள் மந்தகதியிலேயே இருக்கின்றது. மூன்றாவது முறையும் தானே ஜனாதிபதியாகவேண்டும் என்பதற்கான வியூகங்களும் வகுக்கப்பட்டு வருகின்றது." இவ்வாறான கடந்த அரசின் பல்வேறு குறைபாடுகளையும் நாம் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். இனவாதக் கட்சிகளின் ஆதரவுடனும் அதனது இனவாத செயல்பாடுகளை அங்கீகரிக்கும் போக்குடைய ஆட்சி இலங்கை தேசத்தின் நலனுக்கு பாதகமானது. அதுவும் பொதுபல சேனா எனும் ஒரு அமைப்பை ஊக்கிவிப்பதற்கும், அதனது முஸ்லிம் விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவாக செயல்படும் அரசாக இருந்தது இலங்கை தேசத்திற்கு மிக ஆபத்தானதே.

'மாற்றப்பட்ட' தற்போதைய புதிய அரசு இலங்கைத்தேசிய நலன்களுக்கும், இலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களின் அபிலாசைகளையும் நிறைவேற்றக்கூடிய தகைமையுள்ளதா? இக்கேள்வி மேலெழுவதற்கான நியாயத்தை அலட்சியப்படுத்திவிட முடியாது. காரணம் புதிய தலைமையின் ஆதரவுக்கட்சிகளில் கணிசமானவை இனவாத சக்திகளாகவே இருப்பதை அவதானிக்க முடிகிறதல்லவா! இவர்களின் ஆதரவுடன் பாராளுமன்ற அதிகாரத்தையும் பெறும்பட்சத்திலேயே இலங்கையின் புதிய தலைமையின் நிலைப்பாட்டை முழுமையாக அறியக்கூடியதாக இருக்கும்.

ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் தலைமையை மாற்றுவதற்கான சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் வாக்களிப்பும் அவர்களது சுயாதீனமான அரசியல் முடிவுகளே எமது கவனத்திற்கு உள்ளானது.

வட-கிழக்கு தமிழர். இலங்கைவாழ் முஸ்லிம் மக்கள். மலையக மக்கள் என இம் மூன்று சிறுபான்மை இனங்களின் வாக்குகளே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களை தோற்கடிக்க காரணமாக அமைந்திருக்கின்றது. முஸ்லிம் மக்கள் மத்தியிலுள்ள முதன்மை கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டை மாற்றாது இருப்பினும் பெரும்பான்மையான முஸ்லிம் மக்கள் மகிந்த தலைமைக்கு எதிராகவே வாக்களித்திருப்பார்கள் என்பதை நம்புவதற்கான ஆதாரங்கள் போதுமானவை. யுத்த முடிவிற்குப் பின்பான முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளும், இஸ்லாமிய விரோத சக்தியாக பொதுபலசேனா எனும் அமைப்பை ஸ்திரப்படுத்தியதிலும் கடந்த ஆட்சியின் பங்களிப்பு கணிசமானதாக இருந்திருக்கின்றது. அந்தவகையில் முஸலிம் மக்களின் பெரும்பான்மை வாக்கு பலத்தை கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் ராஜபக்ஷ தலைமைக்கு ஆதரவாக

**நிர்வாக ஆசிரியர்**
தசோனியா

**பிரதம ஆசிரியர்**
விஜி

**ஆசிரியர் குழு**
தேவதாசன்
யோகரட்ணம்
அருந்ததி
சுந்தரலிங்கம்
அசுரா

**வெளியீடு**
இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி
பிரான்ஸ்

**தொடர்புகளுக்கு**
'VADU'
F.D.S.D.S
70 SQUARE DES BAUVES
95140 GARGES LES GONESSE
FRANCE

vadu.world@hotmail.fr
www.thuuu.net

'வடு' இதழ் : 22
மார்ச் 2015

இருந்திருப்பினும் முஸ்லிம் மக்கள் பொரும்பான்மையினர் ராஜபக்ஷ தலைமைக்கு எதிராகவே வாக்களித்திருப்பார்கள் என முஸ்லிம் அரசியல் ஆய்வாளர்களின் உறுதியான நம்பிக்கையாகவும் இருந்துள்ளது.

1997ம் ஆண்டு மலையக மக்களுக்கு என சந்திரிக்கா அரசு ஏற்படுத்திக்கொடுத்திருந்த 'தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினை' இல்லாமலாக்கியது மகிந்த அரசு. மகிந்தவிடம் ஏதேனும் அமைச்சு பதவி கிடைத்தால் போதும் என்ற நிலையை கடைப்பிடித்த தலைமைகளால் மலையக மக்களுக்கான அபிவிருத்தி தடை பட்டிருந்தது. இது மலையக மக்களிடத்தில் மகிந்த மீதான அதிருப்தியை வலுப்படுத்தியே வந்திருக்கின்றது. மலையக மக்களின் நீண்ட நாள் கோரிக்கை சொந்த காணியில் தனிவீட்டுத்திட்டம். இ.தொ.கா தவிர்ந்த ஏனைய மலையக அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இது குறித்தே தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது. மீரியெபத்த அனர்த்தம் இந்த கோரிக்கையை வலிமைப் படுத்திய போதும் மகிந்த செவிசாய்க்கவில்லை.

இந்த நிலையில் ஐ.தே.கட்சியும் - சந்திரிக்காவும் 7 பேர்ச் காணிக்கும், தனிவீட்டுக்கும் உத்தரவாதம் அளித்தது. இதற்கு மகிந்த இவ்வாறு பதில் அளித்தார். “தோற்கடிக்கப்போகும் அணி எந்த வாக்குறுதியும் அளிக்கலாம். வெல்லப்போகும் என்னால் வழங்க முடியாது” என்பதாக. எனவே மகிந்தவுக்கு எதிராக மலையக மக்கள் அணிதிரளத் தொடங்கினர். தொண்டைமானின் வாக்கு வங்கியையும் உடைத்து மக்கள் எதிரணியினரை ஆதரித்தனர். காலா கலாமாக மலையக தொழிலார்களுக்கான சொந்த வாழ்விடத்திற்கான காணி உரிமை விடயத்தில் ராஜபக்ஷ தலைமையின் அலட்சியப்போக்கே தொண்டமானின் வாக்கு அணையை உடைத்து சிதைத்தது. இங்கும் மரபுவழி வாக்களிப்பு மீறப்பட்டு சுயாதீன சிந்தனையில் வாக்களிப்பு நிகழ்ந்திருக்கின்றது.

ஆனால் வட-கிழக்கு தமிழர்களின் வாக்களிப்பின் பின்புலத்தில் என்ன மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது!! சுயாதீனமான அரசியல் முடிவையா வெளிப்படுத்தியிருக்கிறார்கள்!!

கூட்டமைப்பினர் தமது நிலைப்பாட்டை தேர்தலுக்கு ஒரு கிழமைக்கு முன்பாகத்தான் தெரிவிக்கின்றார்கள். வாக்களிப்பு முடிவடைவதற்கு 1மணித்தியாலத்திற்கு முன்பாக அவர்கள் தமது முடிவைத் தெரிவித்திருந்தாலும் வட-கிழக்கு தமிழர்கள் எதுவும் அவர்களை கேட்கப்போவதில்லை. வாக்குச் சீட்டுகளுடன் வீட்டு வாசலில் நின்று, கூட்டமைப்பு எந்தப்பக்கத்திற்கு தலையாட்டப்போகுது என காத்து நின்று தலை குனிந்தபடி ஓடிச்சென்று அந்தப்பக்கத்திற்கு வாக்குகளை கொட்டிவிட்டு வர காத்து நின்றிருப்பார்கள். மத்திய அரசிடம் இருந்து மக்களுக்கு சேவை செய்வதற்கான அமைச்சுப் பதவியை பெறுவதற்கு தயங்கிய கூட்டமைப்பினர், என்ன சேவை செய்வதற்காக கிழக்கு மாகாணத்தில் முதல்அமைச்சர் பதவிக்காக அலைகிறார்கள்?

இலங்கையில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்திருப்பதில் கணிசமான பங்கு பூகோள அரசியல் அதிகார சக்திகளின் பின்புலத்தில் என்பது உண்மையானால் கூட்டமைப்பின் முடிவுகளும்,வடகிழக்கு தழிர்களினது வாக்களிப்பும் பூகோள அரசியல் அதிகார சக்திகளின் நலன்களிற்கு உகந்ததாகவே எம்மால் கருத முடிகிறது. இராஜபக்ஷ தலைமை மாற்றப்படவேண்டியதற்கான காரணங்களிலுள்ள நியாயங்கள் எதுவாக இருப்பினும் வட-கிழக்கு தமிழர்களின் வாக்களிப்பானது மலையக, முஸ்லிம் மக்களைப்போன்று சுயாதீனமான அரசியல் முடிவாக எம்மால் கருதமுடியாதுள்ளது.

எதுவாக இருந்தபோதும் இலங்கையின் புதிய தலைமை மீதான பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் நாமும் காத்திருக்கின்றோம். எதிர்காலத்தில் சாதிய ரீதியாக ஒடுக்கப்படும் அவலங்களை புதிய ஆட்சியின் கவனத்திற்கு கொண்டு செல்லும் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். ●




**நல்லூர் ஆறுமுகம் வழி வந்த தமிழ் தேசியம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்கு தடை...**

# நேர்காணல்



மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை அனுபவங்களையும், அம்மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சுமைகளையும் யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தியதில் மலையக இலக்கிய படைப்பாளிகளின் பங்கு மிக காத்திரமானது. அந்தவகையில் இலக்கிப்படைப்பாளியான தெளிவத்தை ஜோசப் அவர்களும் மிக முக்கியமானவர். கடந்த ஒக்டோபர் 2014ல் நண்பன் மல்லியப்பு சந்தி திலகருடன் நானும், எபிஎம்.இத்ரீஸ், இர்பான் ஆகியோர் தெளிவத்தை ஜோசப் அவர்களை வத்தளையில் உள்ள அவரது இல்லத்தில் சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது. அவர் மிக அனுபவமும், ஆளுமையும் நிறைந்த ஒரு கதை சொல்லி என்பதை அவரது படைப்பினூடாக அறிந்ததைவிட நேரில் சந்திக்கும்போதே மிக துல்லியமாக துலங்கியது. அவரிடம் கேட்கும் கேள்விகளுக்கு அவர் பதில் கூறமாட்டார். கேள்விகளுக்கு அவர் கூறுவது சுவார சியமான நீண்ட கதையாகவே இருக்கும். இருந்தபோதும் அந்த அனுபவத்தை கேள்வி பதிலாகவே பதிவுசெய்கிறேன்.

**அசுரா:** தொடர்ச்சியாக இரண்டு தடவை மலையகத்திலுள்ள பல தோட்டங்களுக்கு செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அங்குள்ள பல தொழிலாளர்களை சந்தித்து உரையாடிப் பெற்ற அனுபவமும், நேரடியாக அங்கு நான் பார்த்து பெற்ற அனுபவமும் மிக அதிர்ச்சியானவை. மேற்குலக நவீன தொழில் உற்பத்தி வளர்ச்சிகள் காரணமாக பல்வேறு நாடுகளும் அப்பயன்பாட்டை பெற்றுவருகின்றது. அந்தவகையில் இலங்கையிலும் தொழில் அடிப்படையில் பல்வேறு மாற்றங்களும், தொழிலாளர்களின் மேம்பாடுகளும் நிகழ்ந்து வருகின்றது. ஆனால் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு காலம் சுழலவில்லை. இலங்கைக்கு புலம்பெயர்ந்த 19ம் நூற்றாண்டு காலத்திலேயே வாழுகின்றார்கள். அவர்களது வாழ்விடமும், தொழிலாளர்களுக்கான உரிமைகளிலும் எந்த மாற்றமும் நிகழ்ந்துவிடவில்லை. இப்போது உங்களுக்கு நாள் கூலி இல்லைத்தானே மாத சம்பளம்தானே எனக்கேட்டபோது அவர்கள் என்னைப் பார்த்து சிரிக்கிறார்கள். இந்த மக்களை இழுத்துவந்த ஆங்கில ஆட்சியாளர்களிடம் இவர்கள் மத்தியில் எந்தவித மாற்றமும் நிகழவில்லை எனக் கூறினால், அவர்களே நம்புவார்களா என்பது சந்தேகமாகவே எனக்குத் தோன்றுகின்றது. எனக்கு என்ன கேட்க தோன்றுகிறதெனில் கால மாற்றமே நிகழாத வகையில் அடக்குமுறைக்குள்ளாகும் இத்தொழிலாளர்களின் நிலமையை சர்வதேச மட்டத்தில் எடுத்துச் செல்ல முடியாததற்கான அடிப்படைக் காரணம் என்ன?

**தெளிவத்தை ஜோசப்:** பொதுவாகவே மலையகம் சம்பந்தமாக அரசாங்கங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை விசித்திரமானது. வெளிநாடுகளில் இருந்து இங்கு வரும் பிரதிநிதிகளை மலையகத்திற்கு அழைத்துச் சென்று சில செழிப்பான இடங்களை காண்பித்து பாருங்க... இதேபோல்தான் இந்த மக்களும் வாழ்கின்றார்கள் எனக்காட்டி அவர்களை திருப்திப்படுத்தி அனுப்பிவிடுவார்கள். இப்ப திலகர்தானே உங்களை அழைத்துச் சென்று பாருங்க! தோட்டங்களைப் பாருங்க! அவங்க லயத்தைப் பாருங்க! இதில என்ன மாற்றம் நிகழ்ந்திருக்கு! எனக் காட்டியிருக்கிறார். தொழிற்சங்க வாதிகள்கூட இதே வழிமுறையைத்தான் பின் பற்றுகிறார்கள். அவர்களும் வெளிநாட்டு பிரதிநிதிகளை அழைத்துச் சென்று 'வெள்ளையடிக்கப்பட்ட' இடங்களைத்தான் காட்டுவார்கள். அதை மீறி அம்மக்களின் நிஜமான வாழ்க்கைச் சூழலை அழைத்துச் சென்று காட்டுவதற்கு யாரும் இல்லை. நீங்கள் கூறியதுபோல் ஆங்கில ஆட்சியாளர்கள் இந்த நிலமையைப் பார்த்தால் ஆச்சரியப்படுவார்கள் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. காரணம் அவன் ஆச்சரியப்பட மாட்டான். அவன்தானே இந்த மக்களை இங்கு அழைத்து வந்தான் என்பது வரலாறு சொல்லும் உண்மை அல்லவா?

உலக வரைபடத்திலேயே கண்ணுக்குப் புலப்படாதவகையில் இருந்த இலங்கைத் தீவை

பிரகாசப்படுத்தியதின் பிரதான பங்காளிகள் மலையக மக்கள்தான். அப்போது இலங்கையின் பொருளாதாரத்தில் 60-80வீதமான வருமானத்தை பெற்றுக் கொடுத்தவர்கள் இந்த மக்கள்தான். ஆனால் தேயிலை போற்றப்பட்டதுபோல், புகழப்பட்டதுபோல் அதற்கு காரணமான மலையக மக்கள் போற்றப்படவில்லை என்பதுதானே உண்மை. இந்த மக்களை அழைத்து வந்த காலத்தில் இருந்து பல ஆண்டுகளாக கல்வி அறிவு மறுக்கப்பட்டே வந்தது. இது குறித்து பிரித்தானிய ஆட்சியின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது. அவர்களும் இங்குள்ள வெள்ளைத் துரைமார்களிடம் அக்கோரிக்கையை முன்வைத்தபோது, துரைமார்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. நாம் அவர்களை இங்கு அழைத்து வந்தது எமக்காக உழைக்கவே தவிர அவர்களை நாம் படிப்பிப்பதற்காக அல்ல என மறுத்து விட்டார்கள். 1930களின் பிற்பாடே கல்வி கற்பதற்கான உரிமை கிடைத்தது. இந்த விடயங்களை நான் எனது படைப்புகள் ஊடாகவும் வெளிப்படுத்தியிருக்கிறேன். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தபோது எங்களுக்கும் மிகப்பெரிய பரிசு தந்தார்கள். அதுதான் வாக்குரிமையை பறித்தது. அதுதான் சுதந்திரத்திற்காக எமக்கு கிடைத்த பரிசு. மலையகமக்கள் வாக்களித்து பாராளுமன்றம் சென்றவர்கள் பெரும்பாலும் இடதுசாரிகளாக இருந்தார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்!! டி.எஸ். சேனநாயக்கா முதலாவது பிரதமராக வந்தபோது ஒன்றைக்கூறினார். அதாவது நாம் கஸ்டப்பட்டு, சிரமப்பட்டு வாங்கிய சுதந்திரத்தை மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கு நாங்கள் ஒருபோதும் இணங்கமாட்டோம். என இந்திய விரோதக் கருத்தையும் முன்வைத்தார். அந்த கருத்தின் மூலம் இந்திய வம்சாவளியினரான எங்களை (மலையக மக்களை) வாக்குரிமையற்றவர்களாக்கினர். இதுபோன்ற பல தகவல்களை பெறுவதற்கு நாம் குமாரி ஜெயவர்த்தனா அவர்களின் நூலை படிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

கல்வி கற்க தடைவிதித்து, பாடத்தைப் பார்க்காதே படத்தைமட்டும் பார். கேள்விகள் கேட்காதே சொன்னதை மட்டும் செய். என்று தடைவிதிக்கப்பட்ட எம்மக்கள் மத்தியிலிருந்து இன்று கணிசமானவர்கள் படித்து பட்டதாரிகளாக வந்துள்ளனர். எனவே மாற்றங்கள் நிகழவில்லை என்று கூறமுடியாது.

லயத்தில பிறந்த தெளிவத்தை ஜோசப்பை பிரான்சில் இருந்து பார்க்க நீங்க வாறீங்க. கனடாவிற்கு வரும்படி அழைக்கிறார்கள். ஜனாதிபதியும் அழைத்து பரிசும் தந்திருக்கிறார்தானே என்றால் அது மாற்றமும் வளர்ச்சியும்தானே. இருப்பினும் உங்கள் பார்வையில் தோட்டத் தொழிலிலும் அவர்கள் வாழ்க்கையிலும் எந்தவித மாற்றமும் நிகழமுடியாது இருப்பதற்கு காரணம் அரசியலும், தொழிற்சங்கங்களும்தான் காரணம் என்பேன். தன்நலம் ஒன்றே பெரிதெனக்கருதும் அரசியல் வாதிகளுக்கே வாக்களிக்கும் துரதிர்ஸ்டமும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இங்கு எம்மை அழைத்து வந்து விட்டு, எம்மை அனாதரவாக விட்டுச்சென்ற நிகழ்வை என்னால் மறக்கமுடியாது. நீ சுதந்திரத்தை கொடுத்து சென்றபோது எங்களுக்கான தீர்வையும் வைத்துவிட்டே சென்றிருக்கவேண்டும்.

**அசுரா:** இது மலையக சமூக பண்பாட்டு கலாசாரம் பற்றிய அறிதலின் நோக்கத்திலானது. உங்களது படைப்புகளிலும், பிற மலையக எழுத்தாளர்களின் படைப்புகளினூடாகவும் தோட்டத் தொழிலாளர்கள் என்றவகையில் ஆண்களும், பெண்களும் படும் அவலங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக பெண் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்திடம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விட வீட்டில் பெண்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறை அதிகமானது. பெண் என்ற வகையில் ஆணாதிக்க ஒடுக்குமுறைக்குள்ளாகும் சம்பவங்கள் குறித்தும் உங்கள் கதைகளின் ஊடாக பதிவு செய்திருக்கிறீர்கள். மேலும் மலையகத்தில் சாதியத்தின் பாகுபாடுகள் குறித்தும் அதனது சமூக விளைவுகள் குறித்தும் நான் பலருடன் பேசியபோது அந்த விசயத்தை யாருமே பிரதான பிரச்சனையாக கருதவில்லை என்றே தோன்றுகின்றது. அவர்கள் தமது பிரச்சனயாக நிலம், வீடு, சம்பளம். இவைகளே நாம் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சனை என்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ளதுபோல் இங்கு சாதியம் எமக்கு பெரிய பாதகமாக இல்லை என்கிறரர்கள். அவர்கள் கூறும் நியாத்தையும், அவர்களுக்கான பிரதான பிரச்சனைகளையும் என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது. இருந்தபோதும் உங்களது கதையான “தீட்டு றொட்டி” யை படிக்கும்போது மலைக சமூகத்தில் உள்ள சாதியப் பாகுபாட்டின் கொடூரத்தை எம்மால் உணரமுடியும். அதுமட்டுமல்லாது நேரடியாக கண்ட உண்மை ஒன்று. ஹட்டனில் சிவில் சமூகத்தினர் நடாத்திய ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் 100வது ஜனன தின நிகழ்விற்கு நான் சென்றிருந்தேன். அங்கு நிகழ்ச்சிகளில் ஒன்றாக தப்பு அடிக்கும் நிகழ்ச்சியும் இருந்தது. நாம் அந்நிகழ்ச்சியை பார்ப்பதற்கு மிக ஆவலாக இருந்தோம். தப்படிக்கும் ஓசை காதுக்கு கேட்டது. மண்டபத்தில் அதிர்ந்தது. ஆனால் திரை விலகவில்லை. தப்படிப்பவரையும் பார்க்கவும் முடியவில்லை. தப்புக் கலைஞர் திரைக்குப் பின்னால் தன்னை மறைத்தபடி தப்பு வாத்தியத்தை இசைத்தார். தன்னை அடையாளப்படுத்த அக்கலைஞர் தயங்கினார். அது குறித்து கதைத்தபோது சாதியக் குறீடாக தப்பு வாத்தியம் இருப்பதுதான் காரணம் என அறியமுடிந்தது. எனவே மலையக சமூகத்தில் இவ்வாறான சாதியப்பாகுபாடுகளின் பாதிப்பு பிரதான விசயமாக கருதமுடியாதா?

**தெளிவத்தை ஜோசப்:** இது சம்பந்தமாக நாம் பேசுவதானால் மேலோர்களே தங்களுக்கு தேவையான சாதிகளை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்பது தெரியவரும். இதற்கு எனது சிறு பராயத்து அனுபவம் ஒன்றைக் கூறலாம். அப்போது எனக்கு 7வயது இருக்கும் என்று நினைக்கிறேன். கும்பகோணத்தில் படிப்பதற்காக எனது அம்மாவின் சித்தப்பாவீட்டில் தங்கியிருந்தேன். அவர் ஒரு பணக்காரர் தென்னந்தோப்புகளுக்கு உடைமையாளர். அவரது சமூக கௌரவத்தின்அடையாளக் குறீயிடு “ஆண்டை” என்பது. அவர் பெரிய ஆண்டை என்றால், நாங்கள் சின்ன ஆண்டைகள். நான் தேயிலைத் தோட்டத்தையும், றப்பர், கோப்பித் தோட்டத்தையும் பார்த்து பழகியவன். அங்கு

தாத்தாவின் தோட்டங்களையும், வயல்வெளிகளையும் பார்த்ததும் எனக்கு மிக ஆச்சரியமாகவும், குதூகலமாகவும் இருந்தது. சுற்றிப்பாக்கவேண்டும் என்ற ஆவல் மேலோங்கியது. அம்மாவின் சித்தப்பாவும் எனது விருப்பம் அறிந்து ''டேய் சவரி இஞ்ச வா, சின்ன ஆண்டைகளைக் கூட்டிக்கொண்டு எல்லா இடங்களையும் காட்டு... அவர்களுக்கு இளநீர் வெட்டிக் கொடு ...'' என்று சவரிமுத்து என்பவரிடம் கூறினார். நான் சவரிமுத்துவுடன் தென்னந் தோட்டங்களையும், வயல்வெளிகளையும் பார்வையிட்டு செல்லுகின்றபோது மகிழ்ச்சியின் எல்லை கடந்துபோய் சவரிமுத்துவின் கையை இறுக பற்றினேன். நடுநடுங்கிப் பதறிப்போன சவரிமுத்து எனது கையை மிக வேகமாக தட்டிவிட்டார். காரணம் நான் சின்ன ஆண்டை. சவரிமுத்து பறையன். சின்ன ஆண்டை எனது கையை பிடித்துவிட்டாரே! பெரிய ஆண்டை அறிந்தால் தனது கையை வெட்டிவிடுவாரே என்பதே சவரிமுத்துவின் பதற்றத்திற்கு காரணமாக இருந்தது. காரணம் சவரிமுத்து பறையன். நாங்கள் ஆண்டைகள். நானும் ஆண்டை என்றால் என்ன! அதற்கு என்னபொருள்! எனத் தேடியபோது ஆண்டை என்றால் உயர்ந்த சாதியினர் என்றும், அதற்கு நேர மேலதிக விளக்கமாக 'தேளின் கொடுக்கு' என பதியப்பட்டிருக்கிறது. பொதுவாக வரலாறு எழுதுபவர்கள் என்ன கூறுகிறார்கள் என்றால் தங்களது சாதியை மறைத்துக் கொள்வதற்காக அதிகமானவர்கள் கிறிஸ்தவர்களாக மாறுகிறார்கள் என்று. அப்படி இல்லை வடகரையிலுள்ள மாதா கோயிலுக்குப் போனால் தெரியும் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு சாதியினர் நின்று வழிபடுவார்கள். இப்படித்தான் நிலமை இருக்கிறது.

அப்படியிருக்க கிறிஸ்தவத்திற்கு மாறி எப்படி சாதியை மறைத்துக் கொள்வது. ஒரு முறை நானும் எனது அண்ணனும் ஒரு தெருவால் சென்று கொண்டிருந்தோம். திடீரென ஒரு பார்ப்பான் எம் முன்னால் வந்து டேய் மூதேவி... மூதேவி... ஒத்திப்போடா என்று கத்தினான். அவன் கத்தின கத்தில அவனது குடும்பி மேலும், கீழுமாக குலுங்கியது.

காரணம் அக்கிரகாரமாம். அதனூடாக நாம் செல்லக்கூடாதாம். நாம் ஓடி வந்து சம்பவத்தை அம்மாவிடம் கூறினோம். டேய் நீங்கள் எல்லாம் அதால போகக்கூடாது அது அக்கிரகாரம். உங்கள அங்குபார்த்ததால அவனுக்கு தீட்டு பட்டிருக்கும். உடனே போய் தலை முழுகியிருப்பான் என்றார் அம்மா.

இதில இருந்து என்ன தெரியுது! பார்பானுக்கு நான் பறையன். எனக்கு சவரிமுத்து பறையன். இப்படியாகவே சாதிய வரலாறு இருக்கிறது. புதுமைப்பித்தன் தனது துன்பக்கேணியில் சொல்லுகிறார் பறைத் தெருவில் இருந்துதான் இங்கு ஆட்களை கூட்டி வந்தார்கள் என்று. ஆனால் சாதியில் குறைந்தவர்களும் வந்தார்கள். சாப்பிட வழி இல்லாதவர்களும் இங்கு வந்தார்கள் என்பதுதான் உண்மை. அவ்வாறு அனைவரும் இங்கு வந்தபோது எல்லோருமே பட்டினியாகவே கிடந்தார்கள். இந்த நிலையில் யார் பெரியவன், யார் சின்னவன், யார் உயர்ந்தவன் என்ற சிந்தனைகள் எப்படி மேலோங்கும். இந்தியாவில் இருந்து இங்கு வந்த பறையனும், வண்ணானும், அம்பட்டனும் இங்கு வந்து கொழுந்து தான் பிடுங்கிறான். கவ்வாத்து தான் வெட்டுறான். இந்த நிலையில் நீ பறையன் நான் சக்கிலியன் போன்ற



வேறுபாடுகள் பெருமளவில் இல்லை. இருப்பினும் எனது "தீட்டு றொட்டியில்" சொல்வது போல் சில சம்பங்கள் நிகழ்கின்றது. இருந்தபோதும் இந்தசாதிப் பாகுபாடு என்பது உங்கட யாழ்ப்பாணத்தில் இருப்பதுபோல் இங்கு இல்லை. உண்மையில் டானியல் போன்ற எழுத்தாளர்களெல்லாம் அந்தக் கொடுமைகள் குறித்து எழுதியது பெரிய விடயம்தான்.

**அசுரா:** ஆரம்பத்தில் இந்த தமிழீழம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட காலகட்டத்தில் மலையகத்தையும் உள்ளடக்கியதாகவே தமிழீழ வரைபடம் எம்மால் வரையப்பட்டது. நாங்கள் உங்களையும் தமிழீழத்திற்குள் தான் உள்ளடக்கியிருந்தோம். இதை ஆரம்பத்திலேயே ஸி.வி வேலுப்பிள்ளை அவர்கள் கண்டித்து, அது தவறான பார்வை என கூறியிருக்கிறார். இரு சமூகங்களுக்கிடையேயான சிந்தனை, உறவு முறைகளை கவனத்தில் கொள்ளாது

இடதுசாரிய பொருளாதார சிந்தனையில் மலையகத்தை தமிழீழத்தோடு உள்ளடக்கியதில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.ரோ.ஸ். போன்ற இயக்கங்களே முதன்மையாக இருந்தது. அவர்கள் சிந்தனையிலும், எண்ணங்களிலும் நேர்மை இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் சாத்தியம் இல்லை என்பதை உங்கள் தலைவர்கள் அன்றே தெரியப்படுத்தியவர்கள். இவ்வாறான பின்புல அனுபவங்களும், கடந்தகால தமிழ் ஈழத்திற்கான ஆயுத விடுதலைப் போராட்ட அரசியலின் பட்டறிவுகளுடாகவும் நாம் தொடர்ந்தும் தமிழ்த் தேசியம் என்ற ஒரு கருத்து நிலையை முன்வைத்து வருகின்றோம். அதுவே எமது 'மூச்சாகவும், உயிராகவும்' இருந்து வருகின்றது. நீங்களும் தற்போது மலையக தேசியம் என்ற கருத்து நிலையையும் முன்வைத்து வருகின்றீர்கள். எமது தமிழ்த் தேசியம் என்பது இலங்கை வாழ் பிற சமூகத்தினர்களுக்கு ஒரு அச்சுறுத்தும் கருத்து நிலையாக இல்லையா? எமக்கான நியாமான அரசியல் உத்தரவாதங்களை கோருவதன் அவசியங்கள் இருந்தபோதும் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் எமது தமிழ்த் தேசியம் எனும் சொல்லாடல் அச்சுறுத்தும் மொழியாக இருக்கிறதா? அல்லது அது நியாயமான சொல்லாடல்தான் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

**தெளிவத்தை ஜோசப்:** தமிழ்த் தேசியத்திற்கான நியாயங்கள் இருந்தபோதும் ஆரம்பத்தில் நடந்த தவறு இதுதான், எங்களையும் உள்ளடக்கியதாக இலங்கை வரைபடத்தை மாற்றி அமைத்தது. நீங்க உருவாக்கிய இலங்கை வரைபடத்தை பார்தவுடன் சிங்களவர்கள் பயந்து போனது என்னவோ உண்மைதானே! இலங்கைக் கடல்பகுதியில் 90 வீதமான பகுதி தமிழ் ஈழத்துக்குள் வந்ததே! மலையக மக்களையும் உள்ளடக்கிய தமிழ் ஈழம் என்ற சிந்தனை மிக தவறானது. வன்னியில் வாழ்ந்த எமது மலையக மக்களின் நிலை என்னவானது. முள்ளிவாய்க்கால் முடிவில் அதிகமாக கொல்லப்பட்டவர்கள் யார்? மலையக மக்கள் இல்லையா? வன்னியில் மலையக மக்கள் வந்து குடியேறிய அனுபவம் ஒரு வரலாற்றுப்பாடம். சிங்கள மக்களின் காணிகளை பறித்து வெள்ளைக்காரர்கள் மலையக மக்களுக்கு கொடுத்துவிட்டார்கள் என ஒரு பகுதி மலையக மக்களை அடித்து விரட்டினார்கள். ஏதோ இலங்கையையே வெள்ளைக்காரர் எமக்கு சொந்தமாக தந்துவிட்டுப்போனது போல் சிங்களத் தேசியத்தின் நிலைப்பாடாக இருந்தது. இவ்வாறு சிங்களத் தேசியத்தால் அடித்து விரட்டப்பட்டவர்கள் தமிழ்த்தேசியம் எனும் வன்னிக்குள் வந்து வாழ்ந்த கதையும் எமக்கு கற்றுத்தந்த ஒரு வரலாறுதான். சிறீதரன் என்பவர் இராமசாமிக் காவியம் எனும் ஒரு கதை எழுதியுள்ளார். அதில அந்த இராமசாமி என்பவன் வன்னிக்குரிய அடையாளம் அற்றவன். அவன் எப்படி வவுனியாவுக்கு வந்தான், அங்குள்ள நிலங்களை சொந்தமாக்கினான் என்பதுதான் அந்த இராமசாமிக் காவியத்தின் உள்ளடக்கமாக இருக்கும். யாழ்ப்பாணத்தவர்களால் வன்னியில் பிடிக்கப்பட்ட காடுகளை சுத்தமாக்கி விவாசயம் செய்யுமாறு மலையக மக்களை அதில் குடியேற்றினார்கள். காட்டைச் சூழ உள்ள அக்காணிகளில் யானை போன்ற காட்டு மிருகங்கள், கொசுக்களின் நடமாட்டம் காரணமாக தம்மால் அங்கு வாழமுடியாதென கருதியே அதில் மலையக மக்களை குடியமர்த்தினார்கள். அந்த காட்டு நிலங்களை சுத்தமாக்கி விவசாயம் செய்து வளமாக்கிய பிற்பாடு அந்த நிலத்தை விட்டு விரட்டுவதற்கா அரசாங்க அதிகாரிகளின் ஆதரவையும் பெற்றார்கள். இந்த சம்பவங்கள் குறித்த ஒரு இலக்கியப் படைப்பாக குந்தவையின் 'யோ-கம் இருக்கிறது' எனும் கதை அமைந்திருக்கிறது. இது உங்க காணியில்லையே நீங்க தோட்டத்துக்கே போங்க. காணிச் சொந்தக்காரங்க வந்து எமக்கு தொல்லைதாரார்கள். அவங்க வந்து அடிச்சு விரட்டுவதற்கு முன்பாக நீங்களே போங்க. என யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர்களே மலையக மக்களை அங்கிருந்து விரட்டுவதற்கு துணையாக இருந்தார்கள். இவ்வாறு இரண்டு தேசியங்களாலும் எமக்கு கிடைத்த அனுபவத்தை வைத்தே நீங்க கேட்ட கேள்விக்கான பதிலையும் நீங்களே தேடுங்களேன்.

**மல்லியப்புசந்தி திலகர்:** (தெளிவத்தையாரிடம் கேட்கப்பட்ட மலையகப்பிரச்சினைகளை ஏன் சர்வதேசத்துக்கு எடுத்துச்செல்லவில்லை என்கிற கேள்வி தொடர்பாக ) அசுரா நீங்க மலையக மக்களின் நிலையை சர்வதேசமயப்படுத்துவது சம்மந்தமாக கேட்ட கேள்விக்கு நான் மேலதிகமாக சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன். முதலில ஒருவிசயம். நீங்க தனி நாடு கேட்டு அரசாங்கத்திற்கு எதிராக யுத்தம் செய்தபோது தமிழ் என்கிற அடையாளத்துடன் தான் வடகிழக்கு இயக்கங்களின் போராட்டங்கள் அமைந்தன. இதை வந்து அரசாங்கம் எங்கட தமிழ் வேற, உங்கட தமிழ்வேற என்றெல்லாம் பிரித்துப் பார்க்கவில்லை. யுத்தத்தின் விளைவு எல்லாத் தமிழருக்கும் ஒன்றாகவே அமைந்தது.

இன்றும் கூட மலையக இளைஞர்கள் யுத்தத்தைக்காரணம் காட்டி சிறையிலடைக்கப்பட்டுள்ளார்கள். இதன்காரணமாகவே நாம் அதிகமாக பாதிக்கப்பட்டோம். குறிப்பாக எமது தலைமுறை 1980 களுக்குப்பின் 'மலையகத் தேசியம்' என்ற கருத்தியலைக் கூடமுன்னெடுக்க முடியாத சூழ்நிலை உருவானது. நாங்கள் நாலுபேர் சேர்ந்து கூடி கதைத்தாலே நாங்கள் ஏதோ இயக்கம் தொடங்கிவிட்டோம் என்கிற பார்வைதான் ஆளும் வர்க்கத்துக்கு இருந்தது. அப்படி சமூகப் பண்பாட்டுத்தளத்தில் மலையகத்தில கூட இயங்க முடியாத சூழ்நிலையை வடகிழக்கில் முன்னெடுக்கப்பட்ட யுத்த சூழல் உருவாக்கியது. அதிலயும் எங்களின் அடையாளம் தொலைந்தது. அதற்கு முதல் தலைமுறைக்கு என்ன நடந்தது? பதினைந்து இலட்சத்தில் பாதித் தொகையை இந்தியாவுக்கு அனுப்பினார்கள். அந்தநிலையிலும் எங்களின் அடையாளமும் பலமும் தொலைந்தது. 1963ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பில் இலங்கையில் இரண்டாவது அதிகளவான சனத்தொகையைக் கொண்டிருந்த நாங்கள் 1981ம் ஆண்டு கணக்கெடுப்பின்போது நான்காம் நிலைக்குத் தள்ளப்பட்டோம். இரண்டாம் நிலைக்கு வந்த உங்களின் போராட்டம் எங்களை சர்வதேசம் என்ன, எங்களது பூர்விகமான இந்தியாவே கூட கண்டுகொள்ளாத ஒரு சூழ் நிலையை உருவாக்கியது. அதற்கும் முந்தின தலைமுறைக்கு என்ன நடந்தது. வெள்ளைக்காரன் இலங்கைக்கு சுதந்திரத்தைக் கொடுக்கிறான்.

சுதந்திர இலங்கை எமது சுதந்திரத்தை பறித்தது. அதிலயும் எங்களின் குடியுரிமையும் அடையாளமும் தொலைந்தது. நாங்கள் எங்களது அடையாளத்துக்காகவும், வாக்குரிமைக்காகவும், நாளாந்த சம்பளத்துக்காகவும் என உடனடிப்பிரச்சனைகளுக்காகவே உள்நாட்டில் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்க வேண்டிய சூழலில் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சனைகளை சர்வதேசத்திற்கு எப்படி கூறுவது. ஆனாலும் அதுகுறித்து சர்வதேசத்திற்கு சொல்லவேண்டிய கால கட்டம் இப்போதுதான் வந்திருக்கின்றது. இந்தியாவிற்கே சொல்ல வேண்டிய காலகட்டம் இப்போதுதான் வந்திருக்கின்றது. தெளிவத்தையாரின் விஷ்ணுபுர விருதினைக் கூட எமது பிரச்சனையை தமிழ் நாட்டிற்கு கொண்டுசெல்லும் ஒரு ஊடகமாகவே நாம் கையாள நேர்ந்தது. இப்போதெல்லாம் பேஸ்புக்கில் சொல்லுவதும் சர்வதேசத்திற்கு சொல்வது போலத்தானே. ஆனால் பான் கீ மூனுக்கு இவையாவும் தெரியப்போவதில்லையே! காரணம் அவர் தமிழ் பேஸ்புக்கில் இல்லைத்தானே. எனவேதான் அதற்கான அரசியலை நாம் கையில் எடுக்கவேண்டியுள்ளது. ●





## கிடைக்கப்பெற்ற நூல்கள்



# “புகலிடத்தில் நிலைத்திருக்கும் சாதியம்”

புகலிடத்தில் சாதியம் எவ்வாறு நிலைத்திருக்கின்றது என்பதை அறியும் ஆவலில் ஒரு கலந்துரையாடல் தேவரயாளி இந்துக் கல்லூரியில் 16-10-2014 ல் ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கலந்துரையாடலை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பொருளாளரும், கவிஞரும், ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளருமான சின்னராசா அவர்களே ஒழுங்கு செய்தார். தலித் சமூகத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், இளம் ஆசிரியர்கள், பல்கலைக்கழக பேராசரியர்கள், அரசியல் ஆர்வலர், இளம் அரச ஊழியர்கள் என நாற்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தலைமை உரையை சின்னராசா அவர்களும், வரவேற்புரையை ஓய்வுபெற்ற ஆசிரியர் சிவாநந்தம் அவர்களும் நிகழ்த்தினார்கள். குணசிங்கம் அவர்களும் சாதிய போராட்ட அனுபவங்களையும் சமகால அரசில் நெருக்கடி காரண-மாக தலித் சமூகம் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சனைகள் குறித்தும் உரையாற்றினார். தமிழ் அழகன் பிரான்சில் இயங்கிவரும் இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியுடன் தனக்கு ஏற்பட்ட தொடர்புகளின் அனுபவத்தை விரிவாக பேசினார். தோழர் தெணியான் அவர்கள் சமகால அரசியல் நெருக்கடியில் தலித் சமூகத்திற்கான அரசியல் வெற்றிடம் குறித்தும் அதை நிரப்புவதற்கு ஏற்ப செயல்பட வேண்டிய அவசியம் குறித்தும் உரையாற்றினார். கலந்துரையாடலில் இராஜேஸ்கண்ணா, தர்சன் போன்றார் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்த விவாதத்தை தொடக்கி வைத்தனர். அவ்விவாதத்தின் முடிவாக தலித் சமூகத்தின் நலன்களுக்கான செயல்பாட்டு அமைப்பு ஒன்றை உருவாக்குவது என முடிவெடுக்கப்பட்டது. மேற்கொண்டு இது குறித்த வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கான ஒரு குழு தெரிவுசெய்யப்பட்டது. செல்வானந்தன், வீரகுமார், தமிழ் அழகன், இராஜேஸ்கண்ணா போன்றோர் அக்குழுவில் இணைந்து தொடர்ச்சியான வேலைகளை முன்னெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. ●







# மானிப்பாய் பனை தென்னை வள அபிவிரித்தி சங்கத்தின் அங்கத்தவர்களுடனான சந்திப்பு

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிரித்தி சங்கத்தின் தலைவர் சரவணன் மற்றும் சி.அன்னலிங்கம், கே.மதியாபரணம், அமலசேகரம் ஆகியோரை 16-10-2014ல் தமிழ் அழகனும், அசுராவும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. தலித் சமூகத்தின் தொழில் உற்பத்திகளின் பின்னடைவுகளும் அதற்கான அரசியல் பின்புலன்கள் குறித்த கருத்துகளை பகிர்ந்து கொண்டார்கள். தலைவர் சரவணன் குறிப்பிடும்போது யாழ்மாவட்டத்தில் மட்டும் 19 பனை தென்னை வள அபிவிரித்தி சங்கங்கள் இருப்பதாகவும் அச்சங்கங்களின் குடும்ப உறுப்பினர்களின் வாக்குகள் இருபது நாயிரத்திற்கும் அதிகமாக இருக்கிறது என்றார். இந்த வாக்கு வங்கி அரசியலின் பின்புலமே சங்கங்களுக்குள் முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றமைக்கான காரணம் என கருதுவதாகவும் தெரிவித்தார்.

சந்தனக்குச்சி, சவர்க்காரம், சக்கரை மதுபானம் போன்ற உற்பத்திகளை எமது சமூகம் செய்து வந்தது. அவ்வாறான உற்பத்திகளின் தொடர்ச்சியும், நவீன மயப்படுதல்களும் இல்லாததால் இன்று அவ்வாறான உற்பத்திகளை எமது சமூகம் மேற்கொள்ள முடியாது இருக்கின்றதுது. அதற்கான அடிப்படைக்காரணம் எமது சமூகத்திற்கான தனித்துவமான அரசியல் பலம் இல்லாதிருப்பதே எனும் அபிப்பிராயத்தையும் தெரிவித்தனர். முன்பு எமது சமூகத்திற்கான நியமனப் பிரதிநிதியாக எம்.சி.சுப்பிரமணியம் இருந்தபோது எமது சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் அக்காலகட்டத்தில் நிகழ்ந்திருக்கின்றது. எனவே அதுபோன்ற அரசியல் நியமனம் ஒன்றே தலித் சமூகத்தின் சமூக வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் வாய்ப்பாக அமையும் எனும் கருத்தை தமிழ் அழகன் வலியுறுத்தினார். சங்கங்களுடனான இவ்வாறான சந்திப்புகளை நாம் தொடர்ந்து மேற்கொள்வதன் ஊடாக பல்வேறுவிதமான கருத்துகளை பகிர்ந்துகொள்வது ஆரோக்கியமாக அமையும் எனும் கருத்தையும் முன்வைத்தனர். ●










# எனது ஆதங்கம்

-குணசிங்கம்-



தோழர் எம்.சி.சுப்பிரமணியம் காலத்தில் எமது அமைப்பிற்குள் மேட்டுக்குடி மனப்பான்மை உள்ளவர்களின் ஆதிக்கமும் செல்வாக்கும் இருந்ததில்லை. தோழர்களுக்குள் செயல்பாடுகள் மீதான கருத்து முரண்பாடுகள் விமர்சனங்கள் இருந்தாலும் அமைப்பு பிளவு படும் அளவிற்கான முரண்பாடுகள் இருந்ததில்லை.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் கருத்து முரண்பாடுகளுக்கும் அப்பால் பிளவுபடும் அளவிற்கான நிலமை உருவாவதற்கு அங்கு மேட்டுக்குடிகளின் மேலாதிக்கமும் செல்வாக்கும் மேலோங்கி இருந்ததே காரணம் என்பேன். 1978ம் ஆண்டு என்று நினைக்கிறேன் நானும் லோகேஸ்வரனும் செந்தில்வேல் அவர்களுடன் பல வகையில் முரண்படவேண்டி வந்தது. புலிகளின் ஆதிக்கம் இருந்த காலத்தில் தோழர் செந்தில்வேல் அவர்களால் யாழ் பிரதேசத்தில் சுதந்திரமாக வேலைசெய்ய முடிந்தது. காரணம் அவர்கள் புலிகள் மேற்கொண்ட அராஜக போக்கிற்கு எதிராக எந்த நிலைப்பாடும் எடுத்ததில்லை. நாம் அதற்கு மாறாக புலிகளின் நடவடிக்கைகளை விமர்சித்தோம். அதன் காரணமாகவே எம்மால் சமூக வேலைகள் எதையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. அது மட்டுமல்லாது எமது சிறுபான்மைத் தமிழர் மகாசபையும் தடைசெய்யப்பட்டதோடு எமது உடமைகள் யாவும் சூறையாடப்பட்டது.

இன்றைய எமது தலித் சமூகத்தின் மேம்பாடுகள் குறித்த அரசியல் வேலைகள் செய்வதாயின் என்னை பொறுத்தவரையில் மேட்டுக்குடி அரசியலோடு இணைந்து வேலை செய்வது எமது சமூகத்திற்கு மிக ஆபத்தானது. நாம் இனவாதம் பேசாத சிங்கள கட்சிகள் எதனுடனும் இணைந்து வேலைசெய்யலாம். ஆனால் தமிழ் மேட்டுக்குடி அரசியல் கட்சிகளுடன் இணைந்து வேலை செய்வதென்பது எமது சமூகத்திற்கு மிக ஆபத்தானதாகவே முடியும். நீண்டகால அரசியல் சமூக வேலைகள் செய்தவன் என்ற அனுபவத்தில் இதை நான் கூறுகின்றேன். ●

# சாதிய போராட்டத்தின் ஒரு பழுத்த ஆவணத்திற்கு எமது அஞ்சலி



**கன்பொல்லை எனும் கிராமம் வரலாற்றில் சாதிய போராட்டங்களை எதிர்கொண்ட ஒரு கிராமம். அங்கு வாழ்ந்த முத்தையா தவராசா அவர்கள் சாதி எதிர்ப்பு போராட்டங்களின் ஒரு பழுத்த ஆவணம். சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகஜன இயக்கம் போன்ற சாதி எதிர்ப்பு போராட் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றியவர். ஒடுக்குமுறை சாதியினரால் தலித் சமூகத்திற்கான கல்வி மறுக்கப்பட்ட காலம் ஒன்றிருந்தது. அக்காலகட்டத்தில் தலித் சமூகத்தின் கல்வியின் அவசியத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கான பல பாடசாலைகளை ஸ்தாபித்தவர் எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள்.**

**அதேபோல் முத்தையா தவராசா அவர்களும் தலித் சமூகங்களின் கல்வி மேம்பாட்டிற்காக சிந்தித்தவர். யாழ்.கரவெட்டி ஸ்ரீநாரதா மகாவித்தியாலயத்தின் ஸ்தாபகர்களில் அவரும் ஒருவராகஇருந்திருக்கிறார். மறைந்த சாதிய எதிர்பபு போராட்டத்தின் முதிர்ந்த அம்மனிதனுக்கு இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி தனது அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றது. அவரது பிரிவால் துயருறும் உற்றார் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

# ஓர் அறிமுகத்திற்கான நேர்காணல்

**அசுரா:** எபிஎம்.இத்ரீஸ் என்பவர் வடக்குத் தமிழ் இலக்கிய, அரசியல் சூழலில் பெரிதாக அறிமுகம் ஆகவில்லை என்றே கூறலாம். உங்களது படைப்புகள் சிலவற்றை நான் வாசித்தவன் என்ற வகையில், உங்களுடைய கட்டுரைகள் சிந்தனைகள் என்பன இஸ்லாமிய தீவிரவாதத்தின் எதிர்ப்பை எதிர்கொள்ளும் விதமாக இருப்பதோடு, தீவிர இடதுசாரிகள் எனப்படுவோர் மத்தியிலும் உங்கள் கருத்துக்கள் நிராகரிக்கப்படும் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

ஆலிம்களின் தீவிரப்போக்கையும், மத்ரஸாக் கல்வி முறை மீதான விமர்சனம், வஹாபியம் என்பது திரு குர்ஆனுக்கு நேர்பொருளில் விளக்கமளிப்பதாலேயே அது ஒரு தீவிர வன்முறை சக்தியாக உள்ளது, திரு குர்ஆன் என்பது இறுக்கமான ஒரு கருத்தியல் அல்ல, காலம், சூழல், நிலமைகளுக்கு அமைய வளர்ச்சிப்போக்கில் சிந்திக்கும் தன்மை கொண்டது போன்ற அம்சங்களை உங்களது ஹலால் எனும் சிறிய நூலினூடாக அறியக்கூடியதாக உள்ளது. திரு குர்ஆன் என்பது வெறுமனே முஸ்லிம் சமூகத்துக்குரியதல்ல அது மனித குலத்திற்கே வழிகாட்டும் கருத்தியலை உள்ளடக்கியதாகும் எனவும் வலிறுத்துகிறீர்கள்.

“அதிகாரம் பற்றிய இரண்டு கண்ணோட்ம்” என்ற உங்களது கட்டுரைத் தொகுப்பில் சார்பியல் எனும் தலைப்பிலான, மற்றும் “இயக்கமயமாதலும் மக்கள் மயமாதலும்”, “அதிகாரம் பற்றிய இரண்டு கண்ணோட்டம்” போன்ற கட்டுரைகளின் அடிப்படையிலேயே நான் முன்பு கூறியதுபோல் உங்கள் கருத்துகள் தீவிர இடதுசாரிச் சிந்தனைக்கு உவப்பற்ற அம்சங்கள் இருப்பதாக நான் கருதுவது. அதிகாரம் பற்றிய இரண்டு கண்ணோட்டங்கள் என்ற கட்டுரையில் அப்துல் ரஹ்மான் அல் கவாகிபி எனும் துருக்கிய நாட்டு அறிஞர் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. “இஸ்லாம் என்பது மத அதிகாரத்தை அறிமுகப்படுத்தவில்லை, அதை ஏற்கவுமில்லை மத புரோகிதர்களுக்கு அத்தகைய அதிகாரத்தை வழங்கவுமில்லை” என்பதாகவும், மத அதிகாரத்திலிருந்தே அரசியல் அதிகாரம் தோன்றியது போன்ற விபரங்களை அக்கட்டுரை மூலமாக அறியக்கூடியதாக உள்ளது.

“சோனகத் தேசம்” எனும் நூலில் என்றே ஞாபகம். அதிலேதான் இஸ்லாமிய சிந்தனை என்பது குறிப்பிட்ட முஸ்லிம் சமூகத்திற்குரிய ஒரு சிந்தனை அல்ல அது இன, மத, பண்பாட்டு வேறுபாடுகளுக்கும் அப்பால் மனித குலத்திற்கே பயனுள்ள சிந்தனை என்பதை வலியுறுத்தும் ஒரு தொகுப்பாக அமைந்திருக்கிறது.

“இஸ்லாமிய இலக்கியம் புத்துயிர்ப்பும் புரிதல்களும்” என்ற நூல் இலக்கிய மரபுகள் குறித்தும், அதன் கருத்தியல் அடையாளங்களை விமர்சிக்கும் போக்கையும், அதேபோல் இஸ்லாமிய இலக்கியம் என்பது கருத்தியல் முக்கியத்துவம் கொண்டது என்பாதாகவும் கூறப்படுகிறனது. இஸ்லாமிய இலக்கிய கருத்தியல் என்பது இறுக்கமான தளர்வில்லாத ஒரு சிந்தனைக் கட்டமைப்பு என்ற வகையில் விபரிக்கப்பட்டிருக்கிறது.

எனது முதலாவது கேள்வி என்னவெனில் மேற்குறிப்பிட்ட நூல்களுடாகவும் உங்களை இரண்டு முறை இலங்கையில் சந்தித்து உரையாடியவகையிலும் நீங்கள் வடக்குத் தமிழ் இலக்கிய சூழலில் பெரிதாக அறிமுகமாகவில்லை. எனவே எந்தவகையில் உங்களை அறிமுகம் செய்ய விரும்புகின்றீர்கள்.

**எபிஎம்.இத்ரீஸ்:** அறிமுகப்படுத்துவது அல்லது என்னொரு சூழலுக்கு கொண்டு செல்வது என்பதைப் பொறுத்தவரையில் இன்று இருக்கக்கூடிய முகாமைத்துவ கண்ணோட்டத்தில் பார்த்தாலும் தன்னைத் தானே அறிமுகப்படுத்தும் ஒரு யுகமாகவே இருக்கின்றது. அந்தவகையில் அறிவுப் பெருக்கத்துக்கு மத்தியில் எதை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலே பார்க்கின்றபோது அந்த கருத்து முக்கியமானது. ஆனால் முஸ்லிம் பண்பாட்டு புத்துயிர்ப்பு- சீர்திருத்த பணிகளில் ஈடுபடுகின்ற எழுத்துச் செயற்பாட்டாளர்கள் போன்றோருக்கு இருக்கக்கூடிய பிரச்சனை என்னவென்றால், அவர்கள் எழுதுகின்ற மொழி, வெளியிடுகின்ற இதழியல் பண்பாடு என்பது பிற பண்பாட்டைச் சேர்ந்த வாசக குழுமங்கள் வாசிக்கப்படாது என்பதுபோன்றே எழுதப்படுகின்றது. மொழிக் கையாழுகையைப் பொறுத்தவரையில் முழுக்க முழுக்க குறியீடுகளையும் பண்பாடு சார்ந்த கலைச் சொற்களையும் கொண்ட எழுத்துச் செயற்பாடாகவும் இருக்கின்றது. தமிழ் பேசுகின்ற அனைத்து சமூகங்களும், பண்பாடுகளும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு பொது மொழிக் கையாளுகை என்பது முஸ்லிம் எழுத்துச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றவர்களிடம் இல்லாத ஒரு குறைபாடு இருக்கின்றது. எனவேதான் தென்னாசிய சூழலில் இருக்கின்ற மொழிக் கையாளுகை ஊடாக இஸ்லாமியப் பண்பாட்டை எல்லோரும் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்கின்ற ஒரு புது முயற்சியிலும் நான் ஈடுபட்டு வருகின்றேன்.

உதாரணமாக அரபுமொழி சார்ந்த வாசிப்பு அனுபவங்கள் ஊடாக அரபுமொழிசார்ந்த சொல்லாடல், எடுத்துரைப்புகளில் இருந்து அவற்றை தமிழ்ச் சூழலில் புரிந்தகொள்ளக்கூடிய வகையில் எவ்வாறு இலகுவாக எடுத்துரைக்கலாம் என்ற முயற்சியையும் எனது எழுத்து பணியூடாயக மேற்கொண்டும் வருகின்றேன். இவ்வாறான பணியை ஒருவரால் மட்டும் மேற்கொள்ளமுடியாது வேறுபலரும் இதுபோன்ற முயற்சியில் ஈபடுகின்றபோதுதான் அவை பரவலாக சென்றடைய முடியும் என்றும் கருதுகின்றேன். மற்றொருவகையில் இவைகளை புரிந்து கொண்டு ஊடாடுகின்ற உங்களைப்போன்றவர்களுடைய தொடர்பாடல்கள் சந்திப்புக்கள் தொடச்சியான உரையாடல்கள் கூட எம்மை அடுத்தகட்ட வாசிப்பிற்கு உள்ளாக்குகின்ற போக்காவும், அதனூடாக எமது எழுத்துச் செயற்பாடும் அடுத்தகட்டத்திற்கு நகரமுடியும் என்பதிலும் நம்பிக்கையுடையவனாகவும் இருக்கின்றேன்.

பெரிதும் பண்பாட்டு தளத்திலேயே நான் இயங்கிவருகின்றேன். பண்பாட்டு சீர்திருத்தம் உட்பட பண்பாட்டுக்குள் உறைந்திருக்கும் வன்முறை சார்ந்த கருத்தியல் பயங்கரவாதங்களை மறு வாசிப்பினூடாகவும் உரையாடல் மற்றும் சமூக செயற்பாடுகள், செயலமர்வுகள், பண்பாட்டு நிகழ்வுகள் போன்றவற்றில் பங்கேற்பதனூடாகவும் அதனைச்செய்து வருகிறேன். சமயக் கல்வியையும் பொதுக் கல்வியையும் இணைக்கும் கல்விச் செயற்பாடுகள் எழுபதுகளிலேயே முஸ்லிம் பண்பாட்டில் தோன்றி விட்டது. அத்தகைய கல்விப் புலத்தைப் பெற்றவன் என்பதால் இப்பணியைச் செய்வதும் சவால்களை எதிர்கொள்வதும் எனக்கு எளிதாக இருக்கிறது.

போருக்குப் பிந்திய சூழலில் தமிழ்-முஸ்லிம் உறவு குறித்த விடயங்களிளேயே பெரிதும் அக்கறைசெலுத்தி வருகின்றேன். சமய வாதங்களும் கடும்போக்கு மற்றும் தூய்மைவாத செயற்பாடுகளும் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக நடைபெற்ற இனமுரண்பாட்டு யுத்தமும் ஏகாதிபத்திய, பல்தேசிய கம்பனிகள் மற்றும் தொழில் முனைவோரின் கெடுபிடிகளும் தமிழ்மொழிச் சமூகங்களுக்கிடையிலான இடைவெளியை அதிகரித்து விட்டன. ஆனால் இணைந்தே வாழவேண்டிய எதார்த்தம் இங்கே ஆழமாக நிலவுகிறது. இச்சமூகங்களின் தனித்துவ அடையாளங்கள் ஒரு புறம் இருக்க, ஒருங்கிணைந்து பணியாற்றக்கூடிய பொதுப் புள்ளிகளை கண்டடைவதும் அதற்கான எழுத்துச் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் அதிலிருந்து தோதான சிறுசிறு வேலைத்திட்டங்களில் இணைந்தும் செயற்பட்டு வருகிறேன். களத்தில் இறங்கி வேலைசெய்தால் சாதிக்கலாம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

**அசுரா:** ANDRE COMT SPONVILE எனும் பிரான்ஸ் சிந்தனையாளர் ஆன்மிகம் என்பது கடவுள்,மத நம்பிக்கை உள்ளவர்களுக்கு மட்டுமே உரித்தான ஒரு சிந்தனை முறை அல்ல. இறையியல் அற்ற ஆன்மிக சிந்தனையும் உள்ளது எனக்கருதுபவர். அவர் இஸ்லாம் குறித்த ஒரு கருத்தை அண்மையில் வெளியிட்டுள்ளார். அதாவது தற்போது கத்தோலிக்க சிந்தனையானது தனது மதவாத மரபுக் கோட்பாட்டிலிருந்து பலவகையில் தளர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. ஜனநாயகம், மனித உரிமை போன்ற விடயங்களை உள்வாங்கும் தன்மைக்கு கத்தோலிக்க மதபீடங்கள் முன்வந்துதிருக்கின்றது. இஸ்லாத்தில் அவ்விதமான மாற்றத்திற்கு இடமேயில்லை என்கிறார். அதற்கு காரணம் குர்ஆன் என்றே கூறுகிறார். கடவுளிடமிருந்து நேரடியாக இறங்கிய ஒரு கருத்தாக குர்ஆன் இருப்பதால் நவீன மாற்றங்கள் ஏற்படுவதற்கு அவை தடையாக உள்ளது. இருப்பினும் குர்ஆன் காலம் சூழலுக்கு ஏற்ப மொழிபெயர்க்கப்படுமே ஆயின் இஸ்லாமே உலகில் மிக உயர்ந்த மதமாக இருக்கும் என்று கூறுகின்றார். இது பற்றிய உங்களது அபிப்பிராயம் என்ன?

**எபிஎம்.இத்ரீஸ்:** இதில் மூன்று விடயங்களை இந்தக் கேள்வி கவனப்படுத்துவதாக கருதுகின்றேன். முதலாவது ஆன்மிகம் என்பது மதத்திற்கே உரிய ஒன்று அல்ல என்பது. இரண்டாவது முஸ்லிம்கள் குர்ஆன் சிந்தனையூடாகவே அனைத்தையும் நோக்குவதால் ஒரு இறுக்கமான சமூகமாக தற்காலத்தில் தேங்கியிருக்கிறது என்ற விடயம். அடுத்ததாக குர்ஆனை உரியமுறையில் அணுகினால் இருக்கும் மதங்களில் உயர்வான ஒரு மதமாக இருக்கமுடியும் என்பதை அவர் ஒப்புக்கொள்ளும் தன்மையையும் பார்க்கலாம். ஆன்மிகம் என்பது மதத்திற்கு மாத்திரம் சொந்தமானது அல்ல என்பதில் ஒரு உண்மையிருக்கு என்பதாக நானும் உணருகின்றேன். ஆன்மிகத்தை மட்டுமே ஒரு வாழ்க்கை நெறியாகவும், இஸ்லாத்திற்கே ஆன்மிகம் சொந்தமானது என்று கட்டமைக்கின்ற மரபு இஸ்லாத்தில் கிடையாது. கடந்தகால இஸ்லாத்தின் வரலாற்றை பார்த்தோமாயின் முஸ்லிம் பண்பாட்டுக்குள்ளும் இறையியலில் பல்வேறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்ட கருத்துப்பள்ளிகள் இருந்திருக்கின்றது. மோத்தஸாக்கள், கதரியாக்கள், ஜெபெரியாக்கள் போன்ற விதி வாதக் கோட்பாட்டாளர்கள் இருந்துள்ளனர். சுயவிருப்பின்றி நிர்ப்பந்த இறையியலாளர்களை கொண்ட கருத்துப் பள்ளிகள் தோன்றிய ஒரு வரலாற்றுப் பின்புலம் இருக்கின்றது. அவற்றையெல்லாம் இணைத்துக்கொண்ட வகையிலேயே இஸ்லாமிய இறையியல் சிந்தனை மரபும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. அதேபோன்று பிற சமூகப் பொருளாதார அரசியல் சார்ந்த விவகாரங்கள் இஸ்லாமிய மூலாதார

**“அறிமுகப்படுத்துவது அல்லது என்னொரு சூழலுக்கு கொண்டு செல்வது என்பதைப் பொறுத்தவரையில் இன்று இருக்கக்கூடிய முகாமைத்துவ கண்ணோட்டத்தில் பார்த்தாலும் தன்னைத் தானே அறிமுகப்படுத்தும் ஒரு யுகமாகவே இருக்கின்றது.”**

நூல்களிலிருந்து மீண்டும் மீண்டும் மறுவாசிப்பு செய்யப்பட்டு வந்துள்ள சூழலையும் நாம் அவதானிக்கமுடியும். இதில வந்து எங்கு தேக்கநிலை அடைகிறதென்றால் இந்த ஜித்திஹாத் எனப்படும் அறிவு ஆராய்ச்சி முறைமையே அதற்கு காரணமாகும். ஏற்கனவே மறுவாசிப்புக்குட்படுத்தி புனர்நிர்மாணித்து வந்த இமாம்களுக்கு பின்பு வருகின்ற யுகத்தில் மறுவாசிப்புகளுக்கான வாசல்கள் அடைபட்டுவிட்டன. யாரும் அதைத்திறக்கமுடியாது. ஜித்துஹாத்தின் வாசல் மூடப்பட்டுவிட்டது.

குறிப்பிட்ட இமாம்கள் மட்டுமே அதற்கு தகுதியுடையவர்கள். அதற்கு பின்பாக வரும் இளைய தலைமுறைப் புலமையாளர்கள் அதற்கு தகுதியுடையவர்கள் அல்ல. இருப்பதை வழிமொழிவதே அவர்களது கடமை எனும் சிந்தனைத் தேக்கநிலை உருவாகின்றது. இதற்கு அரசியல் ரீதியான அழுத்தங்களும் ஒரு காரணம். ஆன்மிகத்தில் ஏற்பட்ட நிறுவனமயமாக்கலும் சமூக பொருளாதார விஞ்ஞான அறிவியல் துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளாமல் ஆன்மிக விசயங்களிலேயே மூழ்கி, அனைத்துப் பிரச்சனைக்குமான தீர்வு அதிலேயே கொட்டிக்கிடக்கிறது எனும் ஒரு வாதம் உருவாக்கப்பட்டதும் அறிவாராய்ச்சித் துறையில் மேலோங்க முடியாது போனதற்கு காரணமாகும்.

கிறிஸ்தவ மதம் குறித்துப் பார்த்தோமாயின் இயேசு மக்களுடைய பாவங்களுக்காக தன்னை அர்ப்பணித்தல், தியாகம் செய்தல், மக்களுக்காக தன்னை ஒப்புக்கொடுத்தல் என்ற ஒரு சித்தாந்தம் வலிமையாக உள்ளது. அங்கே மக்களுக்கும் கடவுளுக்கும் இடையே ஒரு இடையீட்டாளராக இருக்கின்றார் என்பது கிறிஸ்தவத்திலுள்ள இறையியல் சிந்தனை. இஸ்லாமிய இறையியல் சிந்தனையோடு நாம் ஒப்பிட்டு பார்க்கின்றபோது நபிகள் அறிமுகப்படுத்திய இஸ்லாமிய இறையியல் சிந்தனையில் கடவுளுக்கும் மக்களுக்கும் இடையேயான இடைத் தொடர்பாளர் என்பது இல்லை.

**அசுரா:** நபிகளும் மீடியற்றர்தானே

**எபிஎம்.இத்ரீஸ்:** இயேசுவை மீடியெற்றராக நம்புகின்ற அளவிற்கு நபிகளை இடையீட்டாளராக, அவ்வாறான தகுதியில், அதாவது இறைவனைப் பற்றிய நம்பிக்கையும் நபிகள் பற்றிய நம்பிக்கையும் சமாந்தரமானது அல்ல என்பது இஸ்லாமிய இறையியல் சிந்தனை. இதில் இறையியல் சிந்தனையே மேலோங்கியிருக்கும். கிறிஸ்தவத்தில் கடவுள் பற்றிய சிந்தனைக்கும் இயேசு மீதான விசுவாசத்திற்கும் மிக நெருக்கமான உறவு இருப்பதாகக் காணலாம்.

இயேசுவை கடவுளாக கருதும் மனநிலை மேலோங்கி இருப்பதை நாம் காணலாம். இஸ்லாம், கிறஸ்தவம், யூதம் போன்ற மதங்கள் மத்திய கிழக்கு செமித்திய குடும்பத்தை சேர்ந்தவைகளாக இருந்த போதிலும், அவற்றுக்கிடையே நுண்ணிய வித்தியாசங்களும் காணப்படுகின்றன. கிறிஸ்தவ சிந்தனையில் இயேசு மக்களுக்காக தன்னை பிதாவிடம் அல்லது இறைவனிடம் ஒப்புக் கொடுக்கிறார். இங்கே மக்கள், இயேசு, இறைவன் ஆகிய முக்கூட்டு உறவில் இயேசு ஓர் இடையீட்டாளராக மாறுகிறார். இந்த மையவாதச் சிந்தனையே கிறிஸ்தவம் மேற்கில் பரவிய போது ஆழமாக முன்வைக்கப்பட்டது. இதனால் அறிவொளிக் காலத்தில், அங்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு



சிந்தனைப் பள்ளிகளும் அதற்கான பொறி முறைகளும் தோற்றம் பெற்றன. குறிப்பாக நிதிசார் வங்கிகள், கம்பனிகள் போன்றவற்றின் தோற்றத்தைப் போல ஜனநாயக பொறிமுறைகளும் அரசியல் வடிவங்களும் மனித உரிமை அமைப்புக்களும் தோற்றம் பெற்றன. இயேசுவின் இடத்தை அவை எடுத்துக்கொள்கின்றன. ஆனால் மத்திய கிழக்கில் இறுதியாக தோன்றிய இஸ்லாம் முன்வைத்த நம்பிக்கைக் கோட்பாடும் அதனடியாகத் தோன்றும் அறத் தரிசனங்களும் சற்று வித்தியாசமாகவே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. கடவுளுக்கும் மனிதனுக்குமிடையில் இடைத்தரகர் இல்லை என்ற நம்பிக்கை இங்கு வலுவாக உள்ளது. இஸ்லாத்தில் கடவுளிடம் நேரடியாக பிரார்த்திக்கலாம். இங்கு தனிமனித வாதம் முதன்மைப்படுதப்படுகிறது. நூற்றாண்டுக்கு மேலாக தமக்குள் போராடிக் கொண்டிருந்த அசையும் நாடோடி இனக்குழுக்களை ஒருங்கிணைப்பதற்கு இத்தகைய நம்பிக்கை தேவையாக இருந்தது. இதனால் தனிமனிதனின் நற்குணம் என்ற சான்றிதழை வைத்தே, இஸ்லாம் கூறிய மற்றைய அறத்தரிசனங்களும் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. இஸ்லாம் முன்வைத்த வாழ்வாதார திட்டங்களோ, பொருளியல் முறைகளோ, அரசியல் கோட்பாடுகளோ மேற்குலகைப்போல, பாரிய நிறுவன அமைப்பை பெறவில்லை. நீண்ட காலமாக அரை நிலப் பிரபுத்துவமும் பழங்குடி வாழ்வியலுமே அங்கு நீடித்தது. 60களில் எண்ணைப் புரட்சிக்குப் பின் அறபு இஸ்லாமிய முதலாளித்துவ சக்திகள் சமதர்ம

அணிகளுக்கு இடமளிக்கவில்லை. அவர்களை இஸ்லாம் விரோத அவிசுவாசிகளாகவே அறிமுகப்படுத்தி வந்தன. இதனால் இஸ்லாம் குறித்த புதிய வாசிப்புக்களும் செயல்வாதங்களும் முடக்கப்பட்டன.

19ஆம் நூற்றாண்டில் தோன்றிய முஸ்லிம் புத்துயிர்ப்பு வாத அணிகளுக்கு மத்தியில் ஆதிக்கம் பெற்றிருந்த வஹாபியம் இஸ்லாத்திற்கு நேர்பொருளிலேயே விளக்கம் கூறி வந்தது. புதிய விஞ்ஞான முன்னேற்றங்களைக் கூட காலந்தாழ்த்தியே ஏற்றுக் கொண்டது. ஆனால் அல்குர்ஆன் உரை மரபு வரலாற்றை எடுத்து நோக்கினால், அது பல்வேறு வாசிப்புக்களையும் பல்வகைமைகளையும் கொண்டதாக உள்ளது. அல்குர்ஆனின் மொழி பல்வேறு அர்த்த சாத்தியங்களுக்கான நெகிழ்வுத் தன்மையை கொண்டுள்ளது. துரதிர்ஷ்ட வசமாக கடும் போக்கு மற்றும் தூய்மைவாத அணி சமய அதிகாரத்தின் மையத்தலிருப்பதாலும் செல்வ பலம், அரசியல் பலம் அவர்களின் கையிலிருப்பதாலும் இஸ்லாத்தின் இந்த பன்முக வாசிப்பு மேற்குலக வாசிகளுக்கு காட்டப்படவில்லை. ஆனாலும் பிரான்ஸ், ஜேர்மன், பிரிட்டன் போன்ற மேற்கு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் முஸ்லிம் அறிவு ஜீவிகள் இந்த பன்முக வாசிப்பை முன்வைத்தும் செயல்பட்டும் வருகின்றனர். அண்மையில் பிரான்ஸில் அல்குர்ஆனுக்கான பெண்ணிய வாசிப்பு பற்றிய மாநாடு நடைபெற்றது. அமெரிக்காவில் இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வேதேச நிறுவனம் செயற்பட்டு வருகிறது. அது நூற்றுக்கணக்கில் புதிய மறுவாசிப்பு ஆய்வுகளை வெளியிட்டுள்ளது.

**அசுரா:** வடக்கில் நிலவும் சாதிய-சமூக மரபிற்கும் கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் என்ன? மேலும் அங்குள்ள தமிழ் முஸ்லிம் உறவுகளின் பலம் பலவீனங்கள் எதுவாக உள்ளது?

**எபிஎம்.இத்ரீஸ்:** சாதியத்தைப் பொறுத்தவரையில் இலங்கைப் பண்பாடு, அரசியல் மானுடவியல் குறித்த ஆய்வுகளின் பின்புலத்தில் இருந்து பார்க்கின்றபோது, முஸ்லிம் மக்கள் மத்தியில் 19ம் நூற்றாண்டுக்கு முன்பாகவே சாதியப் பாகுபாடுகள் தளர்ந்து விட்டதாகவ வரலாற்று ஆய்வாளர்கள் சொல்வதை பார்க்கின்றோம். சமத்துவக் கருத்தாக்கத்திற்காக முன்வைத்த சூபீசத்தின் ஊடாக, இஸ்லாமிய பண்பாட்டுப்பரவுகை காரணமாக சமத்துவக் கருத்தியல் வலுவாக ஊன்றப்பட்ட நிலமையினால் சாதிய பாகுபாட்டில் ஆரம்பத்திலேயே தளர்வுகள் ஏற்பட்டுவிட்டன. அவ்வாறான தளர்வுகளின் காரணமாக இன்றைக்கும் அம்பாறைப் பகுதிகளில் இருக்கும் குடிகளுக்குள் இருக்கக்கூடிய பொறுப்புகள், அதிகாரங்கள் போன்றவற்றைப் பார்த்தால் ஒரு சமத்துவபகிர்வாக இருப்பதையே என்னால் அவதானிக்க முடிகிறது. மட்டக்களப்பில் வாழும் முஸ்லிம்களின் குடிகளுக்கான அடையாளத்தை எதுவென்று அறியமுடியாத ஒரு வரலாற்று நிலமை இருக்கின்றது. நீ என்ன குடி என ஒருவரைக்கேட்டால் அதை சொல்லமுடியாத நிலை இருக்கின்றது. ஆனால் சம்மாந்துறையில் குடியை சொல்லமுடியும், ஆனால் அவ்வாறான குடிகளுக்குள் படிநிலை ஏற்றத்தாழ்வுகள் இருப்பதில்லை.

இலங்கையில் தெற்கு முஸ்லிம்களை விட கிழக்கு முஸ்லிம்கள் தாய்வழி குடிமுறை வாழ்வியலை அதிகமாகக் கொண்டவர்கள். கிழக்கு முஸ்லிம்களின் பள்ளிவாசல் பரிபாலனங்கள் கூட தாய்வழிக் குடும்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மரைக்காமார்களாலேயே முகாமை செய்யப்பட்டு வருகின்றன. இறக்காமம், சம்மாந்துறை போன்ற பாரம்பரிய முஸ்லிம் ஊர்களில் இன்றும் இதனை அவதானிக்கலாம். முஸ்லிம்களுக்குள் அக மணமுறை கிடையாது. குடிக்கு வெளியே விவாகம் செய்வது என்பது சர்வ சாதாரணமானது. குடிவழி வாழ்வியல் சாதியைப் போன்று இறுக்கமானது அல்ல. சமத்துவமும் நெகிழ்வும் கொண்டதாகவுள்ளது. பெண்களுக்குச் சீதனமாக வீட்டையும் நகைகளையும் வீட்டுப் பாவனைப் பொருட்களையும் கொடுப்பது கிழக்கு முஸ்லிம்களின் திருமணப் பொருளியலாகும். மணம் செய்யும் பெண்களுக்கு

> **“19ஆம் நூற்றாண்டில் தோன்றிய முஸ்லிம் புத்துயிர்ப்பு வாத அணிகளுக்கு மத்தியில் ஆதிக்கம் பெற்றிருந்த வஹாபியம் இஸ்லாத்திற்கு நேர்பொருளிலேயே விளக்கம் கூறி வந்தது. புதிய விஞ்ஞான முன்னேற்றங்களைக் கூட காலந்தாழ்த்தியே ஏற்றுக் கொண்டது.”**

தாயின் வளவிலேயே வீடு கட்டிக் கொடுக்கப்படும். வீடு கட்ட இடம் போதாவிட்டால் அயலில் காணி வாங்கிக் கட்டிக் கொடுக்கப்படும். இதனால் முஸ்லிம்கள் சனச்செறிவு கொண்ட குடியிருப்புக்களையே உருவாக்கியுள்ளனர். தாய் தன்னை விட்டு பெண்பிள்ளை பிரிந்து செல்வதை விரும்புவதே இல்லை. இரண்டு, மூன்று சகோதரிகள் இருந்தால், அருகருகே வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும். இது தாய்வழி வாழ்வியல் இன்று வரை நிலைத்திருப்பதற்கான வலிமையாகவும் கொள்ள முடியும். கலியாணம் முடித்த ஆண் பெண்வீட்டிலேயே வாழ்கிறான். இங்கு திருமணப் பொருளியல் என்பது தாய்வழிக் குடிமுறையிலேயே அமைந்துள்ளது. முஸ்லிம் கடும்போக்கு வாதிகள் இதற்கெதிராக செயற்பட்ட போதிலும் தந்தை வழி மணக்கொடை முறை பெருமளவு தோல்வியிலேயே முடிந்துள்ளது. குடிவழிமுறை, கலியாணத்தின் பின் தம்பதியர் வாழுமிடம், சொத்துரிமை, குடும்ப அதிகாரம் போன்ற அடிப்படையில் கிழக்கு முஸ்லிம்களை ஆய்வுசெய்த மானிடவியலாளர்கள் இதனை குறிப்பிட்டுள்ளனர்.

முஸ்லிம்கள் வர்த்தக சமூகம் அல்ல. அவ்வாறான தோற்றப்பாடு இருந்தாலும் அது ஒரு கட்டமைப்பும் புறவயமான பார்வையுமாகும். கிழக்கு முஸ்லிம்களில் 60க்கு மேற்பட்டவர்களின் தொழில் விவசாயமாகும்.



தெற்கு முஸ்லிம்களும் கூட குறிப்பாக, கண்டிப் பிராந்திய முஸ்லிம்கள் கறுவா, ஏலம், கராம்பு போன்ற இடைநிலை வாசனை, உணவு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்களாகவே இருக்கின்றனர். மேலே நான் குறிப்பிட்டவற்றில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒருங்கிசைவான வாழ்வியலைக் கொண்டவர்கள். அதாவது பேசும் மொழி, வாழும் நிலக்காட்சிகள் பொதுப்பண்பாட்டு வெளிகள், பொருளாதார கட்டமைப்புகள், உள்ளக குழும வணிகங்கள் போன்ற விடயங்களில் இரு சமூகங்களும் ஒருங்கிணைந்தே காணப்படுகின்றன. எனவே இவ்விரு சமூகங்களின் இருப்புக்கும் வாழ்வியலுக்கும் ஆபத்தான சக்திகளை எதிர்கொள்ளக் கூடிய பொதுப் புள்ளிகளாகவும் இவை உள்ளன. போரினாலும் சமய வாதங்களினாலும் தொழில் முனைவோரினாலும் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக் களைவதே இன்றுள்ள தேவையாகும்.

இதனோடு சேர்த்து முஸ்லிம்களுக்குள் எழுந்துள்ள அக நெருக்கடிகளையும் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. சொத்துடைமை, பதவி, வருமானம், சமூக அந்தஸ்து, ஊர்வாதம் போன்றவற்றில் முஸ்லிம்களிடம் ஏற்றத்தாழ்வுகள் தாராளமாக ஏற்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் வாழும் மற்ற சமூகங்களோடு ஒப்பிடும் போது சாதியரசியல் கிடையாது. தென்னிந்திய முஸ்லிம்களிடம் உள்ளது போன்ற படி நிலைகளும் இங்கு இல்லை. ஒப்பீட்டு ரீதியில் இலங்கை முஸ்லிம்களிடம் ஒரு சமத்துவ நிலை காணப்படுகிறது. ஆனால் ஒரு பக்கீரும், ஹாஜியாரும் ஒரே சஹனில் சாப்பிடுவார்களா என்பது சந்தேகமே. இது போக உஸ்தாமார், பாவாமார், மௌலானாக்கள் என்ற சமூகப்பிரிவினர் கிழக்கு முஸ்லிம்களிடமும் தெற்கு முஸ்லிம்களிடமும் காணப்படுகின்றனர். ஆனால் இது சாதிப் படிநிலை சார்ந்ததல்ல. மௌலானாமார் நபிகளின் வழித்தோன்றல்கள் என்ற ஒரு சமூக அந்தஸத்துடன் வாழ்கின்றனர். இவர்களின் இரத்தவழி தொடர்பை பேணுவதற்காக ஓரளவு அக மணமுறை நிலவுகிறது. பாவாமாரைப் பொறுத்த வரையில் சூபி வழியில் அல்லது பக்தி மார்க்க வழியில் வருபவர்கள். காலனித்துவக் காலத்தில் இவர்கள் தொடர்பூடகக்காரர்களாகவும் புரட்சியாளர்களாகவும் இருந்துள்ளனர். உஸ்தாமார் விருத்தசேதனம், முடி திருத்துதல் போன்ற சமயக் கடமைகளை செய்கின்றனர். மேலே குறிப்பிட்ட சமூகப் பிரிவினர் தற்போது அருகி வருகின்றனர். விஞ்ஞான முன்னேற்றம், கல்வி உயர்வு போன்றவற்றால் இவர்களின் சமூக அந்தஸ்து அதிகரித்துள்ளது. பாவாமார்களில் கலாநிதிப் பட்டங்களை பெற்றவர்கள் கூட உள்ளனர். தற்போது மருத்துவத் துறையை படித்தவர்களே பரவலாக விருத்தசேதனம் செய்கின்றனர்.

என்னதான் தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல், முரண்பாடு, காயங்கள், வடுக்கள் கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்தாலும் பகை மறப்பு எண்ணங்களும் ஏற்பட்டு வருகின்றன. கட்சி அரசியலைப்பற்றி நான் சொல்ல வில்லை. பண்பாட்டு கண்ணோட்டத்திலேயே இவற்றைக் கூறுகிறேன். தாய்வழி குடி முறை வாழ்வியலையே கிழக்கு முஸ்லிம்களும் கிழக்கு தமிழர்களும் விரும்புகின்றனர். தமது பிள்ளைகள் போரினாலும் கல்வி, தொழில் வாய்ப்பினாலும் எங்கு புலம்பெயர்ந்து சென்றாலும் தாய்வீட்டில் குடியிருப்பதையே விரும்புகின்றனர். போருக்குப் பிந்திய இக்காலத்தில் நாட்டார் நிலைப்பட்ட சமய சடங்குகளிலும் வழிபாடுகளிலும் தமிழரின் நாட்டம் செல்கின்றது. முஸ்லிம்கள் மத்தியிலும் தனி நிலைப்பட்ட சூபி ஞான தேடல்கள் பக்கமே கவனம் செலுத்தப்படுகிறது. இன்றைய நுகர்வுக் கலாசார வெறியிலிருந்து விடுபடவும் கடந்த கால போரின் வடுக்களை ஆற்றிக் கொள்ளவும் இன்று நாட்டார் நிலை, ஆன்மீகம் அல்லது உளவள ஆற்றுப்படுத்தல் தேவையாகவுள்ளது. நாட்டார் நிலை நம்பிக்கை வழியாக வரும் தெய்வங்கள் ஊரைக் காப்பதாகவே தமிழ் மக்கள் நம்புகின்றனர். அழிக்கும் தெய்வங்களாக அல்ல. ஆனால் வெளியிலிருந்து வரும் ஆகமமுறைகள் அதி தூய்மை வாதத்தை போதிக்கிறது. இதே நிலையை முஸ்லிம் கடும்போக்கு வாதத்திலும் அவதானிக்கலாம். தென்னாசியச் சூழலுக்கேற்ப புரிந்து கொள்ளப்பட்ட மக்கள் இஸ்லாத்தில் மற்றமைகளை நிராகரிக்கும் கடும்போக்கு கிடையாது. எளிமைத் தன்மையே காணப்படுகிறது. பல்வகைமைகளை, வித்தியாசங்களை அங்கீகரித்தல், அதிக சொத்துச்சேர்க்காமை, விளிம்பு நிலை மக்களுக்காக குரல் கொடுத்தல், ஞானத்தேடல், ஆராய்ச்சி, பற்றற்ற மனம், எளிமை, பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் போன்றவர்களின் பங்கேற்பு, பண்பாட்டு விழாக்கள் போன்ற பல அம்சங்கள் மக்கள் இஸ்லாத்தில் நிறைந்து காணப்படுகின்றது. ●

www.thuuu.net

# பாரபட்சத்திற்கு உள்ளாகும் தலித்துக்கள்

## -து.சோனியா-

அச்சுவேலி மேற்கு ஒரு சிறிய கிராமம். வெள்ளாளர், நளவர், பள்ளர் என மூன்று சாதிய சமூகத்தினர் வசிக்கும் விவசாயக் கிராமம். நான்கு கிராமக் குறிச்சிகளை கொண்ட கணிசமான நிலப்பரப்பைக் கொண்ட கிராமம். இவ்வாறான கிராமக் குறிச்சிகள் ஒவ்வொன்றும் சாதிய அடையாளங்களுடனேயே பேணப்பட்டு வருகின்றது.

வெள்ளாளர் வசிக்கும் பகுதிகளில் வேற்றுச்சாதியினர் சிறு காணித்துண்டைக் கூட வாங்க முடியாத தன்மை காணப்படுகிறது. வெற்றுக்காணிகளாக இருந்தாலும் பயிற்செய்கைக்கு கூட கொடுக்காத தன்மைகள் இங்கு காணப்படுகின்றன. நான்கு கிராமக்குறிச்சிகளுக்கும் மையப் பகுதியில் நளவர் சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இத் தலித் மக்களின் முயற்சியால் அப்பகுதியில் ஒரு பொதுமண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. அந்த மண்டபத்தில் அனைத்து சமூகங்களும் பயன்பெறும் வகையிலான சந்திப்புக்களை மேற்கொள்வது மிகவும் கடினமான காரியம்.

இவ்வாறான சந்திப்புகளை ஒருங்கிணைப்பதற்கு கிராமசேவகரும், சமூர்த்தி உத்தியோகத்தர்களும் மிகவும் தயங்குவார்கள். காரணம் தலித்துக்கள் வாழும் பகுதியிலுள்ள மண்டபத்தில் கூட்டம் நடக்குமாக இருந்தால் அக்கூட்டத்திற்கு வெள்ளாளர் சமூகமளிக்கமாட்டார்கள். அதனால் அவ்வாறான கூட்டங்களை வெள்ளாளர் வசிக்கும் இடமான தோப்பு என்ற கிராமக்குறிச்சியில் இருக்கும் பொதுமண்டபத்தில் நடத்துவதையே வழக்கமாக கொள்கின்றனர்.

ஆனால் இக்கட்டிடம் தலித்துக்களின் கிராமங்களிலிருந்து வெகுதூரத்தில் காணப்படுகின்றது. இதனாலேயே பல கூட்டங்களுக்கு இம்மக்கள் சமூகமளிப்பது சிரமமாக உள்ளது. இவ்வாறு தலித் சமூகத்தவர்கள் கூட்டங்களுக்கு சமூகமளிக்காத பட்சத்தில் பல்வேறு அரச சலுகைகளையும் அவர்களால் பெறமுடியாது போகும் நிலை காணப்படுகின்றது.

இங்கே விவசாய சம்மேளனம் உருவாக்கப்பட்டு விவசாயத்திற்குரிய பொருட்கள் விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுக்கப்படுவதும், அங்கத்தவர் தெரிவும் வருடா வருடம் நடைபெறுவதும் வழக்கமான நடைமுறையாக காணப்படுகிறது. ஆனால் கொடுக்கப்படும் பொருட்கள் பாரபட்சமாக வெள்ளாள சமூகத்தையே சென்றடைகின்றது. காரணம் சம்மேளனத்தின் தலைவர், செயலாளர் என பொறுப்பான பதவியில் உள்ளவர்கள் வெள்ளாள சமூகத்தை சார்ந்தவர்கள். இதன் காரணமாக தொடர்ச்சியாக

> **காலா காலமாக எமக்கு அடிமைப்பட்டுக்கிடந்த சமூகத்தின் நிர்வாகத்திற்குள் நாம் எப்படி அடங்கியிருக்க முடியும் எனும் மேலாதிக்க, ஒடுக்குமுறைச் சாதிய மனநிலைப் போக்கே அந்த சம்பவத்திற்கான அடிப்படைக் காரணமாக உள்ளது.**

பாதிப்புக்குள்ளாகி வரும் தலித்துக்கள் அண்மையில் நடைபெற்ற தெரிவுக்குழுக் கூட்டத்தில் பொறுப்பான பதிவிகளுக்கு தமது தரப்பிலிருந்தும் சிலரை தெரிவு செய்தனர்.


அதனால் சாதியம் தலைதூக்கியது. கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டு வெள்ளாள சமூகத்ததை சேர்ந்த ஆண்கள் பெண்கள் என அனைவருமே வெளிநடப்புச் செய்தனர். இருந்தபோதும் தலித்துக்கள் கூட்டத்தை நிறைவு செய்தனர். அதையொட்டி காரசாரமான வாக்கு வாதங்கள் நிகழ்ந்தது. சாதிய கைகலப்பு-மோதல்கள் நடைபெறாது மனக்குமுறல்களுடன் அனைவரும் கலைந்து சென்றனர். சாதிய உணர்வு நிலை என்பது அனைத்து சமூகங்களிலும் தீராத நோயாக பீடித்திருக்கிறது. காலா காலமாக எமக்கு அடிமைப்பட்டுக்கிடந்த சமூகத்தின் நிர்வாகத்திற்குள் நாம் எப்படி அடங்கியிருக்க முடியும் எனும் மேலாதிக்க, ஒடுக்குமுறைச் சாதிய மனநிலைப் போக்கே அந்த சம்பவத்திற்கான அடிப்படைக் காரணமாக உள்ளது. ●







2015 ஏப்ரல் 4-5



# பெரியாரும் உழுது களை பிடுங்கிய மண்ணிலா இது நடந்தது!!!

பெருமாள் முருகன் அவர்களால் தொகுக்கப்பட்ட 'சாதியும் நானும்'எனும் கட்டுரைத் தொகுப்பை மையமாக வைத்து எமது 21 வது 'வடு' வில் ஒரு கட்டுரையும் எழுதப்பட்டது. பெருமாள் முருகன் சாதியம் குறித்த பல்வேறு கட்டுரைகளையும் எழுதியவர். இந்து பாசிச சக்திகளின் மிரட்டல்களாலும், அச்சுறுத்தல் காரணமாகவும் தான் எழுதுவதை நிறுத்திக்கொள்வதாகவும், தன்னால் எழுதப்பட்ட அனைத்தையும் மீளப் பெற்றுக்கொள்ளப் போவதாகவும் அறிவித்திருக்கிறார். இவ்வறிவித்தலானது இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியாகிய எமக்கு மிகவும் வேதனையும் வருத்தத்தையும் அளிக்கிறது. இந்து பரிவாரங்களின் வேள்வித் தீயால் அரண் அமைத்து ஆட்சி புரியும் பிரதமர் மோடி மீதா இதற்கான குற்றத்தை சுமத்துவது!

மத்தியில் பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியினால் ஆன புத்திகெட்ட செயல் இதுவென்றா நாம் குற்றம் சுமத்திட முடியும் !! தந்தை பெரியாரும் உழுது களை பிடுங்கிய மண்ணில் அல்லவா இது வேர்கொண்டுள்ளது!!!

பெரியாரின் பாசறையில் வளர்ந்தவர்கள் நாம் என சொல்பவர்கள் மௌனம் சாதிப்பதையே எம்மால் மன்னிக்க முடியாதுள்ளது.

தமிழையே சுவாசிப்பவன்! இலக்கியத்தின் காவலன்! என போற்றப்படும்கருணாநிதியின் முன்னால் இச்சம்பவம் நடந்திருப்பதை எவரால்தான் நம்பமுடியும்!

பெருமாள் முருகன் அவர்களுக்கு நிகழ்ந்த எழுத்துச் சுதந்திர அச்சுறுத்தலுக்கு எதிரான எமது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழ் நாட்டில் உள்ள மனித உரிமைவாதிகள் இலக்கியவாதிகள் அனைவரும் இதற்கெதிரான சட்டபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். பெருமாள் முருகன் அவர்களின் எழுத்துப் பணி தொடர்வதற்கான உளவியல் பலத்தையும் நாம் வழங்க வேண்டும்.
இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி: -பிரான்ஸ் (16-01-2015)

# அம்பேத்கர் பக்கம்

## இந்து இலக்கியங்களில் மலிந்து கிடக்கும் தீண்டாமை.



இந்துக்கள் அடிக்கடி கூறும் குற்றச்சாட்டு ஒன்று உண்டு. ஒரு கூட்டத்தார் தனித்தும் விலகியும் வாழ்கின்றனர் என்றும், அக்கூட்டத்தாரிடம் சமூகவிரோதத் தன்மை உள்ளது என்றும் இந்துக்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால், இந்து சமூகவிரோத தன்மையானது தங்களுடைய சாதி அமைப்பின் மிக இழிவான அம்சம் என்பதை இந்துக்கள் வசதியாக மறந்து விடுகின்றனர். கடந்த உலகப்போரின்போது ஜேர்மனியர்கள் ஆங்கிலேயரை எந்தளவுக்கு வசைபாடினார்களோ, அதே அளவுக்கு இந்தியாவில் ஒவ்வொரு சாதியினரும் பிற சாதியாரை வசைபாடி மகிழ்கின்றனர்.

இந்துக்களின் இலக்கியங்களில் மலிந்து கிடக்கும் சாதி வம்சாவழிக் கதைகளில், ஒரு சாதிக்கு உயர்ந்த பிறப்பிடமும் மற்ற சாதிகளுக்கு இழிவான பிறப்பிடமும் கற்பிக்க முயற்சிசெய்யப்பட்டுள்ளது. இத்தகைய இலக்கியங்களுக்கு 'சாஹியத்ரி கண்டம்' என்பது பேர்போன ஓர் எடுத்துக்காட்டு. சமூக விரோத மனோபாவம் என்பது சாதியோடு நின்றுவிடவில்லை. அது இன்னும் ஆழமாகப் பரவி உட்சாதிகளுக்கு இடையே உள்ள பரஸ்பர உறவையும் கெடுத்துவிட்டது. என் மாகாணத்தில் 'கோலக்' பார்ப்பனர்களும் 'தியோருக' பார்ப்பனர்களும் 'கரட' பார்ப்பனர்களும் 'பால்கி' பார்ப்பனர்களும் 'சித்பவன்' பார்ப்பனர்களும் தங்களை பார்ப்பன சாதியின் உட்பிரிவுகள் என்று கூறிக்கொள்கின்றனர். ஆனால் அவர்களுக்கு இடையிலும் சாதித் துவேஷம் இருக்கின்றது.

பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனர் அல்லாதோருக்கும் இடையே உள்ள காழ்ப்புணர்ச்சி, எந்த அளவுக்குக் குறிப்பிடத்தக்கதாகவும் கொடுமையானதாகவும் இருக்கிறதோ-அதே அளவுக்கு பார்ப்பன உட்பிரிவுகளுக்குள்ளும் காழ்ப்புணர்ச்சி இருந்து வருகிறது. இதில் புதுமை ஒன்றும் இலலை. எங்கெல்லாம் ஒரு கூட்டம் 'தனக்கென்று பிரத்தியேக நலன்களை'க் கொண்டுள்ளதோ, அங்கெல்லாம் இந்த சமூகவிரோத மனப்பான்மை காணப்படும். இந்த சமூக விரோத மனோபாவமே அக்கூட்டதார் மற்ற கூட்டத்தாரோடு முழுமையாக கலந்துறவாடுவதைத் தடுக்கிறது. இதன் மூலம் அது தான் பெற்றுள்ள பிரத்தியேக நலன்களைக் காத்துக் கொள்ள முடிகிறது. இதுவே அதனது முதன்மையான நோக்கமும் ஆகும்.

## சாதிகளின் சுயநல மனப்பான்மை.

நாடுகள் எப்படி தம் சுயநலன் கருதி தனித்து வாழ முற்படுகின்றனவோ, அது போலவே பல்வேறு சாதிகளும் தன்னலங்கருதி தமக்குள் உறவின்றி தனித்து வாழ முற்படுகின்றன. இந்தத் தன்மைதான் சாதிகிளிடம் உள்ள சமூக விரோத மனப்பான்மையாக இருக்கிறது. இந்த தன்னல மனப்பான்மை, அனைத்துச் சாதிகளிலும் இருக்கிறது. பார்ப்பனர் அல்லாதாருக்கு எதிராக தங்கள் 'சொந்த நலன்களை'க் காத்துக் கொள்வதே பார்ப்பனர்களின் அக்கறையாக இருக்கிறது. அதுபோலவே, பார்ப்பனர்களுக்கு எதிராக தங்கள் 'சொந்த நலன்களை'க் காத்துக் கொள்வதே-பார்ப்பனர் அல்லாதோரின் அக்கறையாக இருக்கிறது. எனவே, இந்துக்கள் பல்வேறு சாதிகள் சேர்ந்த கதம்பமாக மட்டும் இருக்கவில்லை; தன் சொந்த நலன்களுக்காக மட்டுமே வாழும்-பரஸ்பரம் போட்டி மனப்பான்மை கொண்ட கூட்டங்களாகவும் உள்ளனர்.

சாதி அமைப்பில் வருந்தத்தக்க மற்றொரு அம்சம் உண்டு. முன்காலத்தில் இங்கிலாந்தில் 'ரோஜா யுத்தமும்' 'கிராம்வெல் யத்தமும்' நடந்தபோது, இன்றைய ஆங்கிலேயரின் மூதாதையர் அப்போர்களில் ஆளுக்கொரு தரப்பில் நின்று போரிட்டனர். ஆனால் அவர்களின் சந்ததியினரோ ஒருவருக்கொருவர் எந்தவிதமான வெறுப்பையும் வன்மத்தையும் கடைப்பிடிக்கவில்லை. ஆக, பகை மறக்கப்பட்டுவிட்டது. ஆனால், அன்றைய பார்ப்பனர்களின் மூதாதையார் சிவாஜியை அவமதித்ததற்காக இன்றைய பார்ப்பனர்களை மன்னிக்க இன்றைய பார்ப்பனர் அல்லாதவர்களால் முடியவிலலை. முற்காலத்தில் பார்ப்பனர்கள் 'காயஸ்தர்' களை அவமதித்ததால், இன்றைய 'காயஸ்தர்'கள் பார்ப்பனர்களை மன்னிப்பதில்லை.

இந்த வேறுபாட்டுக்கு காரணம்தான் என்ன? சந்தேகமில்லை சாதி அமைப்புதான் காரணம். சாதிகளும் சாதி உணர்வும் மக்கள் பழம்பகையை மறக்காமல் காத்துவரக் காரணமாகிவிட்டன. மக்களுக்கிடையில் ஒற்றுமையும் சீர்குலைந்துவிட்டன. ●



# மலையகம் தந்த அனுபவ பதிவு

## -அசுரா-

மலையகத்திலும், கிழக்கு மாகாணத்திலும் உள்ள படைப்பாளிகள், சமூக- செயல்பாட்டாளர்களை சந்திக்கலாம் அதற்கு நான் ஒழுங்கு செய்கிறேன் நீ வா. என்றான் அவன். 2014 ஒக்டோபர் மாதம் பிரான்சில் இருந்து பறந்து 2ம் திகதி கொழும்பு சென்று, எனது வரவை அவனுக்கு தெரிவித்தேன். வந்தனி ஒரு நாள் ரெஸ்ட் எடு. 4ம் திகதி விடிய 5மணிக்கு நீ இருக்கும் இடத்திற்கு வருவேன் ஆயத்தமாக இரு என்றான்.

அதிகாலை 4 மணிக்கு ரெலிபோன் அடித்து, ஒழும்பி வெளிக்கிடு என என்னை எழுப்பியதும் அவனே. 5மணி 10 நிமிடம் இருக்கும் நான் இருக்கும் இடத்திற்கு காருடன் வந்து, உன்ர இடத்திற்கு முன்புதான் நிற்கிறோம் வா. என தொலைபேசியில் அழைத்தான். காருக்குள் மேலதிகமாக ஒரு சிறிய ஒடுங்கிய உருவமும் மிக அடக்க ஒடுக்கமாக இருந்தது. அவர் பெயர் கமலதாசன். போன வருடம் இலங்கை சென்றபோதும் அவரது அறிமுகம் இருந்தது சற்று புகையாக நினைவில் கிளம்பியது. ஹட்டன் நோக்கி கார் விரைந்தது. கொழும்பில் இருந்து புறப்பட்டால் இருள் அடர்ந்த பொழுதுகளிலும் மலைநாட்டு வாசல் திறப்பதை அறிவதற்கு வாகனம் ஓட்டும் அனுபவம் வேண்டும். நேராக சீராக ஓடிவரும் வாகனம் சுற்றிச் சுழன்று ஓடும் நிலை அறிந்தால் புரியும் மலைநாட்டு வாசல் திறந்துவிட்டதென. ஹட்டனில் 9மணிக்கு நிக்கவேண்டும்.

ஸி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் 100வது ஜனன தினம். காருக்குள் இருக்கும்போதே நான் ஹட்டன் போய் சேர்ந்து விட்டேன். நிகழ்ச்சியும் முடிந்தது போலவே உணரத்தலைப்பட்டேன். என்ன நடக்கும், யார் யார் வருவார்கள்,ஸி.வி.வேலுப்பிள்ளை யார், அவரது வரலாறு என்ன. போன்ற அனைத்தையும் கார் நிரம்பி வழியும் அளவிற்கு கொட்டிக்கொண்டிருந்தான். வெளியிலோ மலைகளிலிருந்து கொட்டிக்கொண்டிருக்கும் அருவிகளில் என் மனம் தோய்ந்து கொண்டிருக்கும் அதே தருணத்தில், அவன் கொட்டிக்கொண்டிருக்கும் அனுபவங்களாலும் தோய்ந்து கொண்டிருந்தேன். புறப்பட்டு 1 மணித்தியாலம் இருக்கலாம், மச்சி இலைக் கஞ்சி குடிச்சிருக்கிறியா? எனக்கேட்டான். பிரான்சிலையும் யாழ்ப்பாணத்து ஒடியல் கூழ்தானே எங்கட கஞ்சி. அதுக்குள்ள இருக்கிற கடல் 'திரவியங்களையும்' சேர்த்து ஒரு பிடி பிடித்தால் கொஞ்ச நேரத்திற்கு எழும்பி நடக்கவே ஏலாது. அப்படி ஒரு உரமான சமான். அதெங்க இவனுக்கு தெரியப்போகுது என்ற செருக்கும், ஒரு ஹோட்டலுக்கு முன்னால கார் நிக்கப்போகுது என மனமும், இலைக் கஞ்சி குடிக்கத் தயாரானது. பானையும் கரண்டியுமாக வீதியின் ஓரத்தில் நிற்கும் பெண்ணுக்கு முன்பாக கார் நின்றது. இறங்குவதற்கு முன்பாக இந்த அக்காவை வடிவாப் பார், பெரிய கதை இருக்கு பிறகு சொல்லுறன் என்றான். ஒரு பெண்ணைப்பற்றிய கதையெண்டால்...., 'ஆண்குரங்கு' மனம்தானே..., கிளை கிளையாக தாவியது.

எங்கட ஒடியல் கூழை குடிக்கின்ற போது உப்பு புளி காரம் நாவில ஊறி, கொஞ்சம் கொஞ்சமாக வயிறும் ஊதி ஊதி தொண்டை வரை நிரம்புகின்ற உணர்வை நாம் பெற முடியும் அல்லவா. அன்று அந்த அக்கா தந்த சிறு









துண்டு சக்கரையும் கடித்து, ஒரு கிளாஸ் பச்சை நிறத்திலான தண்ணியும் வாங்கிக் குடித்தபோது வயிறும் ஊதவில்லை, தொண்டையும் நிரம்பவில்லை. இலைக் கஞ்சி எனும் அந்த பச்சை நிற தண்ணி நரம்பு நாளங்களுள் ஊடுருவி இரத்தத்துடன் கலந்து தூக்கத்தையும் சோம்பலையும் விரட்டியது. அந்த அதிகாலைப் பொழுதில் ஒரு வகை புத்துணர்ச்சியை தூண்டியது. இலைக் கஞ்சி வடித்தவளின் கதைகேட்கும் ஆவலும் சடைத்து நின்றது. அந்த அக்காவின் கதையை கேட்க, கேட்க கிளை கிளையாக தாவிய மனம் சிலையாகிப்போனது. இவன் நீண்ட நாட்களாக அந்த அக்காவிடம் இலைக் கஞ்சி வாங்கிக் குடிப்பது வழக்கம். சிங்களத்திலேயே தொடர்ந்து கதைத்தும் வந்திருக்கின்றான். வழக்கம் பழக்கமாகி மிக நெருக்கமானபோதே தெரிந்து கொண்டான், அந்த அக்கா ஒரு மலையக தமிழ் பெண் என்று. யாழ்ப்பாண தமிழ் ஈழப் புயலில் நொந்து நூலாகிப்போன வன்னியில் வாழ்ந்த ஒரு பரிதாபத்திற்குரிய குடும்பம். வன்னியில் சிங்கள மெக்கானிக் ஒருவரை காதலித்து திருமணம் செய்திருந்தார் அந்த இலைக் கஞ்சி அக்கா. வன்னியின் தமிழ் ஈழ சாம்பிராட்சியத் தொண்டர்கள் இலைக் கஞ்சி அக்காவின் கணவரான சிங்கள மெக்கானிக்கை தொழில் நிமித்தமாக மட்டுமே சந்தித்து வந்துள்ளனர். ஆனால் சிங்கள இராணுவமோ அந்த சிங்கள மெக்கானிக்கையே பாட்ஸ் பாட்ஸாக கழட்டி பூட்டி விட்டார்கள். அவரது உடல் உதிரிப்பாகங்கள் அதிகமாக செயலிழந்து போனது. தொழில் இல்லை. வன்னியில் தொடர்ந்து வாழவும் அச்சம். தனது சிங்கள கணவனின் கிரரமத்தில் வந்து அதிகாலையில் தெருவோரத்தில் நின்று இலைக் கஞ்சி விற்று தனது கணவனையும் பிள்ளைகளையும் காப்பாற்றி வருகிறார் அந்த இலைக் கஞ்சி அக்கா. அவள் விரித்து வைத்த இலைக் கஞ்சி அக்காவின் கதையை நான் இங்கு இறுக சுருட்டியே வைத்திருக்கிறேன்.

இதென்னடா இது..., ஹட்டனுக்கு கூட்டிப்போறன் என்றவன் ஏன் என்னை ரசியாவுக்கு கூட்டி வந்தான்! குளிரை மனதில் வைத்து சொல்லவில்லை நான் வந்தது ரசியாவென்று. அங்கே நான் லெனியையும், ரொட்ஸ்கியையும், காஸ்ரோவையும் அல்லாவா நேரில் தரிசிக்கப் போகிறேன். நாங்கள் வந்தடைந்தது ஹட்டனிலுள்ள லெனின் மதிவானத்தின் வீட்டுக்கு. நான் இந்த வருடம் இலங்கை செல்வதற்கு உந்துதலாகவும், ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் 100 வது ஜனன விழாவிற்கு ஹட்டன் வரை அழைத்து வந்த 'அவன்', எனக்கு மிக எதிர்-முரண்-மிக்கவன்-அவன். நண்பன் மல்லிப்பு சந்தி திலகர். எனக்கு எந்தவகையில் எதிரானவன், முரணானவன் என்பதை போற வேகத்ததில் இதில் எப்பந்தியிலாவது இறக்கி வைப்பேன்.

யாழ்ப்பாணத்தில் 2013ல் நடைபெற்ற 41வது இலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்டதன் பேறு, நாம் பல நண்பர்களையும், பலரின் அறிமுகங்களையும் தேடிக்கொண்டதுதான். அதில் எமக்கு அறிமுகமான மலையக ஆளுமைகள் லெனின் மதிவானம், மல்லியப்பு சந்தி திலகர் இருவரும். யாழ்ப்பாணத்தில் ஒரே ஒரு இரவின் நீண்டதொடர் உரையாடலில் அவர்களுடன் மிக நெருக்கமாகும் சாத்தியம் அதிசயமாக நிகழ்ந்தது.

ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் 100 வது ஜனன விழாவிற்கான நெறிப்படுத்தலை மிக அழகாக லெனின்




மதிவானம் நிகழ்த்திக் கொண்டிருந்தார். மலையக மக்களின் தலைவர் என்றால் எமது புத்தியில் வேர் ஊன்றிய நாமம் சௌவிய மூர்த்தி திரு தொண்டமான் என்பதாகத்தானே! தொழிலாளர்களின் தலைவர் என்பவர் யாராக இருக்கவேண்டும். தோட்டத்தொழிலின் வலி யாருக்கு புரியும் என்பதை அறிந்து தொழிலாளிகளையே தலைவர்களாக கொண்டு இயங்கி வந்தள்ளது மலையக தொழிலாளர் தேசிய சங்கம். அதன் ஸ்தாபகராக இருந்த வெள்ளையனின் மறைவிற்கு பிற்பாடு நிர்வாகப் பொறுப்பாளராகவும் ஆலோசகராகவும் இருந்து செயற்பட்டிருக்கிறார் ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்கள். இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் மலையகத்தில் இருந்து தெரிவான 7 பாராளுமன்ற உறுப்பினர்களில் தலவாக்கலை தொகுதியிலிருந்து தெரிவானவர் ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்கள். அவர் அரசியல் வாதியாக, தொழிற்சங்க வாதியாக, கவிஞராக கட்டுரையாளராக, நாவலாசிரியராக என பல்வேறு ஆளுமையுடையவராக இருந்திருக்கிறார். அவருடைய நூல்களின் பிரதிகளும், அவர் குறித்த ஆவணத் தொகுப்புகளும் அம்மண்டபத்திலே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.



கட்சி பேதங்கள் அற்று பல்வேறு அரசியல் கட்சியினரும், தொழிற்சங்கத்தினர், படைப்பாளிகள், ஆசிரியர், மாணவர்கள் என பலரும் ஒன்றிணைந்திருந்தனர். வேலுப்பிள்ளை அவர்கள் மேற்கொண்ட சமூகப்பணியே அதற்கான பாலம் அமைத்தது என்பதாகவும் பேசிக் கொண்டனர். பேச்சு, கவிதை, நாடகம், நாட்டியம் என நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் நானும், திலகரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த நிகழ்ச்சி தப்பு ஆட்ட நிகழ்ச்சியே. நிகழ்ச்சி தொடங்கியதாக அறிவிக்கப்பட்டது. தப்பு அடிக்கும் சத்தம் வருகிறது. திரை விலகவில்லை. ஆளையும் காணவில்லை. திலகரிடம் கேட்டேன் கௌற்றில் போட்டிருக்கிறார்களா என்று. இல்லை நான் அந்த தப்பு வாத்திய கலைஞனை கண்டனான். அவர் திரைக்குப் பின்னால் போனவர் என்று. சாதி அடையாளமே அக்கலைஞனை திரைக்குப்பின்னால் ஒழித்து வைத்திருந்தது என்பதை புரிந்து கொண்டேன். அது மக்கள் இசை. மலையக மக்களின் வாழ்வோடும் பண்பாட்டோடும் இணைந்தது ‘தப்பு’. மக்கள் முன்னால் அதை அடிக்க முடியலை என்றால் அது ‘தப்பு’. என்றான் திலகர்.



மலையக மக்கள் குறித்த வட-கிழக்கு அரசியல் சக்திகளின் நிலைப்பாடடை ஸி.வி.வேலுப்பிள்ளை அவர்கள் ஆரம்பித்திலேயே ஏற்றுக்கொள்ளவில்லை- சந்தேகித்தார். நூற்றாண்டு விழா சிறப்பிதழான ‘மாவலி’ யில் பதிவு செய்யப்பட்டிருக்கும் அவரது கட்டுரையில் அதை அறியக்கூடியதாக இருந்தது. அதிலுள்ள சிறு பகுதி:

*“....இத்தகைய சூழலில் மலையகம் சார்ந்த, மலையக மக்கள் குறித்த வடக்கு கிழக்கு சக்திகளின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து இக்கட்டுரையில் ஓர் சம்பிரதாய அளவிலேனும் கதைக்காது போய்விட்டால் நாம் பெருங்குற்றம் புரிந்தோராவோம். ஏனெனில் வட கிழக்கு சக்திகள் அல்லது வட கிழக்கு பிரச்சனை அல்லது இந்நாட்டின் இனப்பிரச்சனை, இந்நாட்டின் இனி வரப்போகும் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடியதாக இருக்கும் என்பது தெளிவு.*

*ஆகவே விரும்பியோ விரும்பாமலோ நாம் இது குறித்து கதைத்துத்தான் ஆகவேண்டி இருக்கிறது.*

*வட கிழக்கு தமது தனி நாட்டு கோரிக்கையை முன்னெடுத்தபோது குறிப்பிடத்தக்க ஓர் அம்சம் யாதெனில் மலையகம் சார்பாக அவை கடைப்பிடித்த மௌனமே. அல்லது மலையகம் சார்பாக அவர்கள் கடைப்பிடித்த மயக்க ரீதியான பின்வரும் முடிவுகளே.*

*1. மலையக மக்கள் அனைவரும் வட கிழக்கில் குடியேறுவர்.*

*2. அல்லது தனி நாடு மலையகத்தையும் உள்ளடக்கித்தான் இருக்கும்"-*

பல்வேறு அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மல்லியப்பு சந்தி திலகரின் செயல்திறன் மிக்க முயற்சியால் ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் நினைவாக அவரது முத்திரையும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

நிகழ்ச்சி முடிய மலையகத்தின் ஒரு பழுத்த அனுபவமான சி.எஸ் காந்தியுடன். நேராக லெனின் மதிவானம் வீட்டிற்கே படையெடுத்தோம். அன்ரன் பாலசிங்கம் புலிகளுடன் இணைவதற்கு முன்பாகவே அவருடைய நீண்டகால நண்பன் சி.எஸ்.காந்தி. நிறைய உண்மைகளை பேசினார். நான் சேற்றை அள்ளி வீச வீச, தனது நண்பன் மீது என்னால் வீசப்படும் சேற்றை கழுவிக் கழுவிக் கொண்டே இருந்தார். அன்ரன் பாலசிங்கத்தின் ஒரு பக்கத்தை மட்டுமே நான் வாசித்திருக்க, சி.எஸ்.காந்தி அவர்கள் அன்ரன் பாலசிங்கத்தின் பல பக்கங்களை படித்திருந்தார். சி.எஸ் காந்தி ஸி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் மைத்துணன். மல்லிப்பு சந்தி திலகரின் ஆங்கில ஆசிரியர்.

ஆகஸட் 8ம் திகதி 9மணிக்கு மீண்டும் ஹட்டனில் 'பெருவிரல்' எனும் கலை இலக்கிய இயக்க நண்பர்களுடனான சந்திப்பையும் திலகர் ஏற்பாடு செய்திருந்தார். ஏபிஎம்.இத்ரீஸ், காகம் பதிப்பக நிறுவனரான இர்பான் அவர்களும் அச்சந்திப்பில் கலந்துகொள்ளும் திட்டம் தீட்டப்பட்டது. இவர்களும் 41வது இலக்கியச் சந்திப்பில் எமக்கு அறிமுகமான இஸ்லாமிய நண்பர்கள். மட்டக்களப்பிலிருந்து ஏபிஎம்.இத்ரீஸ், இர்பான் கொழும்பு வருவார்கள் நான் அவர்களை அழைத்து வருகின்றேன் நீ லெனின் வீட்டில் நின்று இங்கு சந்திக்க வேண்டியவர்களையும், பார்க்கவேண்டிய இடங்களையும் பார். எனக் கூறி அன்று இரவே கிளம்பிவிட்டான் திலகர். லெனின் மதிவானத்தின் வீடு அது ஒரு இடதுசாரிக் குகை. லெனின் மதிவானத்தின் தாயும் தந்தையும் தொழிற் சங்கத் தோழர்கள். அவர்களது வீட்டு மேல்மாடி எனக்கு ஒதுக்கப்பட்டது. லெனினின் சுட்டிப்பயல் காஸ்ரோ என்னைச் சுற்றி சுற்றியே வருவான். உங்கட யாழ்ப்பாணத்து சாப்பாட்டில் என்ன விருப்பம் என்டு சொல்லுங்கோ நாங்க செய்து தாறம் என்ற 'தாயின்' உபசரிப்பின் பாரத்தை என்னால் தாங்க முடியாது போனது. நீங்க எதையெண்டாலும் தாங்கோ அம்மா நான் மேய்ந்து விட்டுப்போறன் என்றால் கேட்கமாட்டா. லெனின், காஸ்ரோ, எனும் இரண்டு இடதுசாரி உறவுகளோடு மூன்று நீண்ட இரவுகள் தூங்காது பேசிக்கொண்டிருந்தேன். லெனின் தனது ஹட்டன் நண்பர்கள் பலரை அறிமுகப்படுத்தினார். லெனினின் தம்பி ரொட்ஸ்கியை போனவருடம் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இருப்பினும் இம்முறை தொலைபேசியில் உரையாடினோம்.

6ம் திகதி காலை கமலதாசன் தனது மைத்துணனின் ஆட்டோவில் லெனின் வீட்டுக்கு வந்து என்னை டிக்ஓயா தோட்டத்தில் உள்ள வெள்ளையன் கல்லறைக்கு அழைத்து சென்றார். பின்பு வெள்ளையன் பிறந்த இடமான முத்துலட்சுமி தோட்டத்திற்கும் அழைத்து சென்று வெள்ளையனுடன் பழகியவர்களை அறிமுகப்படுத்தினார். விஜயகாந் எனும் ஒரு மலையக இளம் படைப்பாளியின் இல்லத்திற்கு சென்று உரையாடினோம். தேயிலைத் தோட்டத் தொழிற்சாலை, நீர் மின் உற்பத்தி இயந்திரங்கள் போன்ற இடங்களுக்கும் கமலதாசன் கூட்டிச் சென்றார். கமலதாசனின் வீட்டில் நான் பார்த்ததும் கேட்டதும் ஒரு அதிசயம். மல்லியப்பு சந்தி திலகரின் சிறு கதையான 'வலி' யிலும் அதுபற்றிய சம்பவம் பதியப்பட்டிருந்தது. அதை நான் நேரிலே பார்த்து மிகவும் பரிதாபப்பட்டேன். மலையகத்து தொழிலாளர்களின் மாடு வளர்ப்பு பற்றியது. அவர்களுக்கு சிறு மேலதிக வருமானத்திற்கான வழிதான். ஆனால் மாடுகளுக்கு! எனக்கு பார்க்க பாவமாக இருந்தது. கால்நடைகள் சுதந்திரமாக வெளியில் உலாவிய காட்சிகளே எமது பார்வைக்கும், புலனுக்கும் பதிந்து போன ஒன்று. ஆனால் மலையகத்தில் மாடுகளை வெளியில் நடமாட விடுவதில்லை. ஒரு இருண்ட கொட்டிலுக்குள்ளேயே அது தனது வாழ்நாள் பூராகவும் நிற்கவேண்டும், படுக்கவேண்டும், நடக்கவேண்டும், வெளியில் விட்டால் எங்கும் பச்சை பசேல் மேய்ந்துவிடும். பின்பு தோட்ட நிர்வாகம் கால்நடை உரிமையாளர்களை மேய்ந்துவிடும்.

முத்துலட்சுமி தோட்டத்தில் ஒரு பயங்கரமான விபத்து நேர்ந்தது. எனது இடது கால் முழங்காலுக்கு கீழ் உணர்வு இருக்கிறது, காலும் வெட்டுப்பட வில்லை. இருக்கிறது. ஆனால் இரத்தம் தோய்ந்த பயங்கரக் காட்சி. பதறிப்போனேன். நிலை குலைந்துவிட்டேன். பார்த்தால் மயக்கம் வரும்போல் இருக்கிறது. கமலதாசிடம் முறையிட்டேன். அவர் எனக்கு ஏதும் முதல் உதிவ செய்யப்போகிறார் என காத்திருந்தேன். ஆனால் அவரோ அண்ணே அது அட்டை அண்ண. அட்டை இரத்தம் நிறைய குடிச்சிட்டு கீழ விழுந்திருக்கும் அதுகடித்த இடத்தில இருந்துதான் இரத்தம் வந்திருக்கு. என்று சொல்லி எனது நிலமையை மிக அலட்சியப்படுத்தியவாறு முன்னால் நடந்து சென்றார்.

கமலதாசுடன் பல இடங்களையும் பார்வையிட்ட பின்பு அன்று பிற்பகல் லொயிநோன் (Loinorn estate) தோட்டத்திலுள்ள திலகரின் ஒன்றுவிட்ட சகோதரன் டொக்டர் சந்திரமோகனின் விருந்தாளியாக சென்றேன். அவரது வைத்தியசாலையிலேயே அன்று இரவு தங்கினேன். புதிய அனுபவம். இந்திய மெகா தனவானான அம்பானியே அந்த தோட்டத்தின் உரிமையாளர். மலையக மக்களுக்கான 24 மணித்தியால வைத்திய சேவை விடுதியில் சந்திரமோகன் தனியாகவே தங்கி வைத்திய சேவை செய்து வருகிறார். இரவுச் சாப்பாட்டை அவரது வீடு சென்று எடுத்துவந்தோம். வரும் வழியில் ஒரு கடைக்கு முன்னால் நின்று தொலைபேசியில் திலகருடன் சிரித்து சிரித்துக் கதைத்தார். என்னவாம் எனக்கேட்டபோது, அவனுக்கு வெளிநாட்டு மயக்கத் தண்ணி குடிச்சு நாக்கு செத்துப்போயிருக்கும், நீங்க எங்கட 'அதிவிஷேசத்தை' வேண்டிக் குடுங்கோ என்றானாம். சந்திரமோகனின் மோட்டார் சைக்கிளுக்குப்பின்னால் பிறந்த ஒரு குழந்தையை மடியில் வளர்த்துவதுபோல் வளர்த்தி வந்து அதன் கழுத்தை திருகினோம் (!!!). அளவான மயக்கத்துடன் அளவுக்கதிகாமாகவே உரையாடினோம். அடுத்தாள் 7ம் திகதி காலை ஒரு ஆட்டோவை ஒழுங்கு செய்து அந்த தோட்டத்தின் உச்சியில் கபானா எனும் அழகுற அமைக்கப்பட்ட உல்லாச விடுதியை

பார்ப்பதற்கு அனுப்பிவைத்தார். அங்குள்ள செயற்கையான வடிவமைப்புகளைவிட இயற்கையின் வனப்பே பேரழகு என்பேன். கபானா போன்ற உல்லாசப் பிரயாணிகளை கவரும் திட்டங்களால் தோட்டத் தொழிலாளர் பாதிக்கப்படுவதாக லெனின் மதிவானனின் கட்டுரை ஒன்று விமர்சிக்கின்றது.

7ம் திகதி மாலை மீண்டும் லெனின் மதிவானம் வீட்டிற்கு சென்று தங்கினேன். அடுத்த நாள் காலை 9மணி அளவில் ஏபிஎம்.இத்ரீஸ்,இர்பான், திலகர் மூவரும் லெனின் வீட்டுக்கு வந்தனர். 10மணி அளவில் பெருவிரல் இலக்கிய இயக்க இளைஞர்கள் ஒழுங்கு செய்த மண்டபத்தை சென்றடைந்தோம். கவிஞர் தவச்செல்வன், படைப்பாளியான சுதர்மன், பத்திரிகையாளரும் படைப்பாளியுமான தினகரனுடன் மேலும் சில இளைஞர்களும் அச்சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர். சமகால இஸ்லாமிய சிந்தனை குறித்து ஏபிஎம்.இத்ரீசிடம் சந்தேகங்களை கேட்டனர். வெளிநாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் தலித்திய செயல்பாடுகள் மீதான சந்தேகங்களையும், கேள்விகளையும் என்னிடம் தொடுத்தனர். தமது நூல் வெளியீடுகள் குறித்தும் மாணவர்கள் மத்தியிலே வாசிப்பிற்கான ஆர்வத்தை தூண்டுவதற்கான தமது திட்டமிடல்கள் குறித்தெல்லாம் உரையாடினார்கள். அவர்களிடமிருந்து விடைபெற்று வடகொம்பரை திசை நோக்கி வாகனம் ஊர்ந்தது. வடகொம்பரைக்கு என்னை திலகர் போன வருடமும் கூட்டிச்சென்று தான் பிறந்து வளர்ந்த சூழலையும், சொந்தங்களையும் என் மனதில் பதித்தவர். வடகொம்பரைக்கு போகும் வழியில் வட்ட கொட எனும் இடத்தில் அமைந்துள்ள ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் சமாதியை பார்வையிட்டோம். அங்கு நான் மேலதிகமாக மட்டக்களப்பு இஸ்லாமிய நடனத்தையும் கண்டுகழித்தேன். ஏபிஎம்.இத்ரீசும், இர்பானும் பின்னணி இசைகள் எதும் இன்றி மிக அற்புதமாக வீதியின் நடுவிலே ஆடினார்கள். செருப்புடன் இருவரும் வந்து சமாதியை பார்வையிட்டபோது படையெடுத்து வந்த அட்டைகள் அவர்கள் கால்களில் ஏறிவிட்டது. மிக அநாயாசமாக தனது காலில் ஊரும் அட்டைகளை விரல்களால் பிடித்து இழுத்து எறிந்து கொண்டிருந்தான் திலகர். இத்ரீசினதும், இர்பானதும் நாட்டியத்தை பார்த்துக் கொண்டிருந்த கொழுந்து கொய்யும் பெண்கள் என்ன சாமி நீங்க இதுக்குப்போய் இப்படித்துள்ளுறீங்க நாங்க நாள்பூரா, காலம்பூரா இதுங்களோடதான வாழுறம் சாமி. எனக் கேலி பண்ணிச் சென்றார்கள். எனது இரத்தத்தை முன்பே குடித்து செரித்ததாலோ என்னவோ அவ்வினங்கள் அப்போது என்னை தீண்டவில்லை. வீதியிலே தட்டிவிட்ட அரை இஞ்சி அளவே ஆன அட்டைகள் யாவும் குத்தி எழும்பி 2இஞ்சி அளவிற்கு தன்னை இழுத்து நீட்டி ஆகாயத்தை நோக்கி மேல் உயர்ந்து நின்று, சுழன்று சுழன்று மனித வாடையை தேடும் அதனது உபாயம் இருக்கே... மிக பிரமிப்பாக இருக்கும். வடகொம்பரையில் திலகர் பிறந்து வளர்ந்த லயத்து வீடு, அதற்கு அருகாமையில் வி.ரி. தர்மலிங்கம் வாழ்ந்த வீட்டிற்கும் விஜயம் செய்தோம்.

இறுதியாக வட்டகொடை சுப்பையா இராசசேகரத்தின் மலையக வரலாற்றுக் களஞ்சியத்திற்குள் பிரவேசித்தோம். மலையகத்தில் அவரது 'காகித மலைகளை' கண்டும் மலைத்துப்போனோம். மலையகத் தேயிலை மரங்களுக்கும் அதன் இரத்தமும் சதையுமான தொழிலாள உறவுகளுக்கும் காலம் 19ம் நூற்றாண்டிலேயே நிற்கிறது. என்ற எனது நினைப்பை சுமந்து கொண்டு கொழும்பை நோக்கி திரும்பினோம்.

இப்போது காருக்குள் ஏபிஎம்.இத்ரீஸ், இர்பான் உடன் உரையாடல்கள் வெவ்வேறு திசைகளாக சுழன்றது. 9ம் திகதி அதிகாலை 1மணியளவில் என்னை எடுத்த இடத்தில தள்ளிவிட்டு, 9 மணிக்கு பம்பலப்பிட்டியில் நிற்கவேண்டும் என கட்டளையிட்டு சென்றனர். 9ம் திகதி இரவு தெளிவத்தை ஜோசப் அவர்களது வீட்டில் விருந்து. அங்கு அடையாளம் எனும் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரான விஜயகுமாரையும் சந்தித்து அறிமுகமானோம். அடுத்த நாள் மாலை புதிய பண்பாட்டுத் தளத்தின் ஏற்பாட்டில் அசுராவும், ஏபிஎம். இத்ரீசும் கலந்து கொள்ளும் ஒரு உரையாடல் என மிக வேகமாக ஏற்பாடு செய்து விட்டான் திலகர். சோமசுந்தரம் தோழர் அதற்கான மண்டப ஒழுங்குகளை உடனடியாகவே நிறைவேற்றி விட்டார். அனைத்துமே மின்னல் வேகத்தில் நடந்து கொண்டிருந்தது.

நான் பழகிய இடது சாரிய சிந்தனையாளர்களில் மிகவும் பன்முக கருத்துகளை மதிப்போடு பேணுபவர்களில் தோழர் இரவீந்திரன். தோழர் லெனின் மதிவானம் மிக மதிப்பிற்குரியவர்கள். தோழர் இரவீந்திரனுடன் இரண்டு தடவையே கண்டு பேசியிருக்கிறேன். மிக நிதானமானர், நன்கு தெளிந்தவர். லெனின் மதிவானத்துடன் உரையாடுவது மிக சுவாரசியமானது. “அசுரா நீ இதை அதிகமா ஏற்றுக்கொள்ளமாட்டாய் என்று நினைக்கிறன்...எண்டாலும்.. நீ சொல்லுறதிலும் நியாயம் இருக்குதுதான் மச்சான்..” என குறுக்கு மறுக்கான உரையாடல்களின் போது லெனின் மதிவானம் சிந்துகிற மொழிகளில் நான் வசப்படுவது நிகழ்ந்திருக்கிறது.

10ம் திகதி மாலை புதிய பண்பாட்டுத் தளத்தால் வெள்ளவத்தை பெண்கள் கல்வி ஆய்வு நிலையத்தில் ஏற்பாடு செய்த சந்திப்பை மல்லியப்புசந்தி திலகர் வழி நடத்தினார். நானும், ஏபிஎம்.இத்ரீசும் உரையாற்றினோம். எனது உரையின்போது சில முரண்பாடுகள் இருப்பினும் திலகருடன் நெருக்கமாக பழகமுடிகிறது என தெரிவித்தேன். அதற்கு திலகர் பதிலளிக்கையில் அசுராவின் இன்றைய பேச்சிலும், அவருடன் நான் பழகுவதிலும் எனக்கு எந்த முரண்பாடுகளும் இல்லை. ஆனால் அவர் என்னோட எந்த வகையில் முரண்படுகிறார் என தெரியவில்லை என்றார். அப்போதும் நான் அவருக்கும் எனக்குமான வித்தியாசத்தையும், முரண்பாட்டையும் அங்கு முன்வைக்கவில்லை. இவனோடு கதைத்துப் பேசினால் உச்சிவிடுவான். எப்போதாவது எழுத்தினால் மடக்கலாம் என அன்றும் மௌனம் காத்தேன்.

மல்லியப்பு சந்தி எனும் கவிதைத் தொகுப்பிலும், நேரில் கதைக்கும்போதும் தான் கல்வி கற்பதற்கு பட்ட துயரையும், அதற்கான ஏக்கத்தையும், தனது ஏழ்மையையும் என்னோடு பகிர்ந்திருக்கிறார். அதிகாலையில் தெருவோரத்தில் முளைத்திருக்கும் வல்லாரை செடிகளை பிடிங்கி கட்டுக் கட்டாக கட்டி ஒரு கட்டு 25 சதத்திற்கு விற்று அதற்கு ஒரு கொப்பி வாங்கித்தான் தான் படித்து இன்று ஒரு பட்டதாரி ஆனேன், என்பது திலகரின் கதை.

கல்விக்காக நான்பட்ட சிரமத்திற்கும் கதைகள் இருக்கின்றது. அதற்கான சாட்சிகளும் என்னிடம் இன்றும் இருக்கிறது. 30 வருட கடும் யுத்தத்திலும் எனது சாட்சிகளின் உயிர் போகவில்லை. அதனது இருப்பிடங்களும் அழியவில்லை. அவர்களை சுற்றி வாழ்ந்த பல குடும்பங்கள் யுத்தத்தால் கொல்லப்பட்டும் இடம் பெயர்ந்தபோதும். அவர்களுக்கு

எந்த தீங்கும் நிகழ்ந்ததில்லை. இன்றும் அதே இடத்தில் உயிருடன் இருக்கிறார்கள் எனது சாட்சிகள்... திலகரின் கல்வியின் மீதான ஆர்வத்திற்கும், முயற்சிக்கும் சாட்சியான சுப்பையா இராசசேகரத்தை (திலகரின் ஆசிரியர்) நான் நேரிலும் கண்டேன், கதைத்தேன். வட்டகொடை ஸ்ரீகிருஸ்ணா சமூகநல பாடசாலை. தற்போது தோட்டத்து சிறுவர்கள் கல்வி கற்கும் வகையில் அம்மண்டபத்தை புனரமைக்கும் பணியை திலகரே மேற்கொண்டிருக்கிறார். அது ஒரு திலகர் மண்டபமாக காட்சிப்படுத்தும் வகையில் வடிவமைத்திருக்கிறார் சுப்பையா அவர்கள்.

நானும் புத்தகம் கொப்பி இல்லாமலேயே பாடசாலைக்கு சென்று வந்தேன். ஒரு புத்தகத்திற்கோ ஒரு கொப்பிக்கோ எத்தனை தடைவை என்று வீட்டில் காசு கேட்பது. ஒரு சுகாதாரப் புத்தகம் வாங்க 5 தடவைக்கு மேல் வீட்டில் காசு வாங்கியிருக்கிறேன். ஆனால் புத்தகம் வாங்கியதில்லை. எப்படி வகுப்புகளை கடந்தேன்! அநேகமாக எனது வகுப்பிலுள்ள பலரது புத்தகங்களில் எனது பெயரையும் எழுதிவிடுவேன். ஒரு நாள் புத்தகம் இல்லாதவர்கள் வெளியே போகலாம் என்றதும் எனக்கு பக்கத்தில் இருந்த நவரட்ணத்தின் புத்தகத்தை நான் இழுத்து பிடிங்கிக்கொண்டேன். அவன் ஆசிரியரிடம் முறையிட்டான். நான் இல்லை இது எனது புத்தகம் என்றேன். அதிலுள்ள எனது பெயரை காட்டி. அவனும் தனது பெயரை அதில் காட்டினான். விசித்திரமான வழக்கு. இரண்டு பேருமே தனது புத்தகம் என்கின்றனர். ஆசிரியர் சாலமன் சபைக்கு அனுப்பிவிட்டார். (தலைமை ஆசிரியர்) சாலமனின் தீர்ப்பு ஆளுக்கு பாதி பாதி என்பதுதானே. ஆனால் தீர்ப்பு இரண்டு பேருக்குமே குண்டியில் 5 பிரம்படி.

750ம் இலக்க போக்குவரத்துப் பாதையால் பருத்தித்துறை வந்து ரவுனில் இறங்க வேணும். பஸ் வந்த பக்கத்தை முதுகுப்பக்கமாக விட்டு முன்பாக நோக்கினால் வடக்கு நோக்கி இரண்டு தெருக்கள் பிரியும். அதில் இடப்பக்கத் தெருவினால் நடந்து சென்றால் 300 மீற்றர் நடந்து போகும் போது கடல் தெரியும். கடல் நெருங்குவதற்கு முன்பு இடப்பக்கமாக ஒரு கோபுரம். பிள்ளையார் கோவில் கோபுரம். அதற்கு முன்னால் ஒரு உண்டியல். இப்பவும் இருக்கிறது. இவைகளே எனது கல்விமீதான ஆர்வத்திற்கும் அக்கல்வியை பெறுவதற்கு நான் பட்ட அவஸ்தைகளின் சாட்சிகள். நாலும் கலந்துனக்கு நான் தருவேன் நீ எனக்கு இராயரட்ணம் மாஸ்டரை இண்டைக்கு வராமல் பண்ணு, கணபதிப்பிள்ளை மாஸ்டரை எப்படியாவது சாகப்பண்ணு. என வீட்டில் காசு திருடிவந்து அந்த உண்டியலில் போட்டு பிள்ளையாரிடம் வேண்டியிருக்கின்றேன். அதே பிள்ளையார் இப்பவும் உயிருடன் இருக்கிறார். இவ்வாறான எனது கல்வி மீதான பற்றுதலிலும், ஆர்வத்திலும் எனக்கும் திலகருக்கும் உள்ள வித்தியாசத்தை, முரண்பாட்டை மனதில் இருத்தியே அன்று உரையாற்ற நினைத்தேன். உரையாடல் திசைமாறியதால் எனது கல்விப்பெருமை குறித்து அத்தருணத்தில் பேசமுடியவில்லை.

மலையகத்திற்கும் பிற்பாடு ஏபிம்.இத்ரீஸ் அவர்களுடன் கிழக்கு மாகாணத்திற்கும் போவதாகவே எனது பயணத்திட்டம் இருந்தது. திரும்ப 12ம் திகதி பதுளையில் ஒரு நிகழ்வில் கலந்து கொண்டு அப்படியே இத்ரீசுடன் கிழக்கு மாகாணம் என்னை அனுப்புவதே திலகரின் வரைபடம் வரையப்பட்டது. பதுளை திலகரின் பூர்வீகம். அங்கு 19ம் நூற்றாண்டில் பிறந்து, இருபதாம் நூற்றாண்டில் இறந்த தன் தந்தை வழி முப்பாட்டனாரின் கல்லறை இருப்பதாகவும் அவற்றை இத்ரிஸ், இர்பான் மு.சிவலிங்கம் போன்றோருடன் சென்று பார்வையிடுவதும் எனது நோக்கமாக இருந்தது துரதிர்ஸ்டவசமாக எனக்கு அது நிறைவேவில்லை. அவர்கள் 10ம் திகதி இரவே பதுளை நோக்கி பயணமானார்கள். நான் 11ம் திகதி யாழ்ப்பாணம் சென்றேன். நான் யாழ்ப்பாணம் நிற்கும்போது 15ம் திகதி வசந்தம் தொலைக்காட்சியில் வடு பத்திரிகை சம்பந்தமான அறிமுகம் ஒன்றை செய்வதற்கும் திலகர் ஏற்பாடு செய்திருந்தார். நானும் மீண்டும் 14ம் திகதி கொழும்பு பயணம் செய்வதற்கு ஆயத்தமானேன். அவ்வேளையிலே வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் வடபகுதிக்கு செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சகத்தில் அனுமதி பெறவெண்டும் எனும் செய்தி கசிந்தது. இந்த நெருக்கடியின் காரணமாக திரும்ப கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு தடங்கல் ஏற்பட்டால் சிரமமாக இருக்கும் என்பதால் வசந்தம் தொலைக்காட்சி நேர்முகம் இரத்துச் செய்யப்பட்டது.

அதே மாதம் 29 ம் திகதி மண்சரிவு இடம்பெற்றதும் பதுளையில் உள்ள ஹல்துமுல்ல பிரதேசத்தில் என்பது பின்னர் தெரியவந்தது. ●

**“தீண்டாமை ஒழிப்பிலே சத்திய அக்கறை ஊன்றி, தேடல்கள் பல நிகழ்த்தி தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் எம்.சி. சுப்பிரமணியம். ஆனாலும், அவருடைய பாடுகளும் பணிகளும் வரலாற்று ஆவணமாகத் தொகுக்கப்படவில்லை. அவருடைய பாடுகளும் என்னுடைய இலக்கியப் பயணத்திற்குப் பாதை வகுத்துத் தந்தன. அந்த அளவில் அவருடைய வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதி என்னுடையதுமாகின்றது. காந்தியவாதியாகவும், கதராடைப் பிரியராகவும், சமூகத் தொண்டினையும், தீண்டாமை ஒழிப்பையும் யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்துச் செல்லுவதிலுள்ள சிக்கல்களை அவர் விரைவிலேயே உணர்ந்திருத்தல் சாத்தியம். தீண்டாமை ஒழிப்பு என்பது அவரைப் பொறுத்தவரையில் கவர்ச்சியான கோசமல்ல. அ஼தே அவருடைய வாழ்க்கயையினதும் ஊழியத்தினதும் மையப் புள்ளி!”(எஸ்.பொ)**

# எஸ்.பொ நிழலில் சிந்தித்த நிகழ்வின் சுருக்கம்




04-01-2015 பிற்பகல் சரியாக நான்கு மணிக்கு எஸ்.பொ நிழலில் சிந்திக்கும் தினம் ஆரம்பமானது. தமிழ் படைப்பிலக்கிய கொடு முடியான எஸ்.பொ அவர்கள் குறித்து பல்வேறு பரிமாணங்களில் உரையாடப்பட்டது. 13 பேச்சாளர்களில் தவிர்க்கமுடியாத சூழலால் இருவர் நிகழ்விற்கு சமூகமளிக்க முடியவில்லை. மற்றைய 11 பேச்சாளர்களும், தமது தலைப்புகளுக்கு அமைய சுருக்கமாகவும் சுவையாகவும் உரையாற்றினார்கள். நிகழ்விற்கு முன்னீடு வழங்கிய தேவதாசன் தனது வரவேற்புரையுடன் எஸ். பொ அவர்களை தனது சிறு பராயத்திலேயே சந்திக்கும் வாய்ப்பு கிடைத்த அனுபவத்தையும் 86ம் ஆண்டு கலாமோகனின் நட்பின் மூலமாக பிரான்சில் சந்தித்த அனுபவத்தையும் எடுத்துரைத்தார். கற்சுறா அவர்கள் அனுப்பிய காட்டானுக்கெனது செய்தி யை விஜி அவர்கள் வாசித்தார்."வணக்கம். எஸ்.பொ வுக்கு நினைவு தினம் உலகம் எங்கிலும் நடைபெறுகிறது. இரண்டு நினைவுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பது சந்தோசமே. எஸ். பொ தீ எழுதினார்,எஸ்.பொ சடங்கு எழுதினார், நனவிடை தோய்தல் எழுதினார் என்பதெல்லாம் சரி. ஒரு எழுத்தாளனாக எஸ்.பொ அவர்கள் சாதித்தார். எழுத்தை கை மீறிப்போகச் செய்தவர் அவர். நமக்கு எழுத்திற்குள் அத்து மீறி நுழைவதற்குகான வழியைக் காட்டியவர். அத்துணிச்சலில்தான் கனடா வந்திருந்த போது அவரைக் கூட்டிவந்து அவர் நெஞ்சிலே பாய்ந்தேன்" என்று தொடங்கியது கற்சுறாவின் செய்தி.

எமது தமிழ் சமூகத்தில் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றதென்று நாம் கருதினால் அது எழுத்துத்துறையிலும்












படைப்பிலக்கியத்திலும் தான் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றதென்பேன். அந்த வெளிச்சத்திற்காக 55 வருடங்களுக்கு முன்பே 'தீ' வைத்தவர் எஸ்.பொ அவர்கள். அவர் இரண்டு விதமான தீ யை கொழுத்தியவர். எழுத்தாளர் மாநாட்டிற்கு சுடலைத் 'தீ' எனும் முதல் கொள்ளி வைத்தவர். இருளடைந்த இலக்கியத்துக்கு வைத்த அவரது 'தீ' யும் அவர் வைத்த சுடலைத் 'தீ' யும் ஒன்றல்ல என்ற வகையில் அசுரா தனது பேச்சில் குறிப்பிட்டார். எஸ்பொ. அவர்களின் படைப்பிலக்கியத்தின் ஆளுமைகளையும், அவரது எழுத்து மகிமை குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார் துரைசிங்கம் அவர்கள். எஸ்.பொ ஒரு கலகக்காரன் என்ற தலைப்பில் பேசிய தோழர் அந்தோனிப்பிள்ளை அவர்கள். முன்பு எஸ்.பொ வின் படைப்புகள் குறித்த அனுபவம் இல்லாது போனாலும், அவரை தேடி படிக்கும் ஆவலுக்கு இந்த நிகழ்வும் காரணமாக அமைந்தது. இலக்கியத்தில் மட்டுமல்லாது அரசியல் முரண்பாடுகளிலும் அவர் ஒரு கலகக்காரனாகவே இருந்திருக்கிறார் என்பதை என்னால் உணரக் கூடியதாக இருப்பதாகவும் தனது பேச்சில் குறிப்பிட்டார். மட்டக்களப்பில் திருமணம் செய்த சம்பவம் குறித்தும், ராசதுரை எம்பிக்கும் எஸ்.பொ வுக்கும் நிகழ்ந்த முரண்பாடுகள். தமிழரசுக் கட்சியின் அரசியல் போலித்தனங்கள் மீது எஸ். பொ முன்வைத்த விமர்சனங்கள் போன்ற பல்வேறு விடயங்களை எம். ஆர். ஸ்ராலின் தனது உரையில் குறிப்பிட்டார்.

என்ன தான் இலக்கிய ஆளுமை இருப்பினும் அவர் அதிகார சாதிய யாழ் மேலாதிக்க சிந்தனைக்கு சேவை செய்யும் அரசியல் சிந்தனை கொண்டவராக என்னால் பார்க்கமுடிகிறது எனும் வகையில் தனது பார்வையை முன்வைத்தார் இரஜாகரன் அவர்கள். நீண்ட காலத்திற்கு பிற்பாடு நண்பன் கலாமோகன் அவர்கள் இந்த நிகழ்வில் கலந்து உரையாற்றிய அதிசய சம்பவம் நடந்தது. தனக்கும் எஸ்.பொ விற்குமான எழுத்து உறவு, ஆபிரிக்க நாவல்களை எஸ். பொ தமிழுக்கு மொழிபெயர்த்த பயன் பாடுகள், அவரது ஆங்கில மொழி ஆளுமை குறித்தெல்லாம் கலாமோகன் பேசினார்.

நனவிடை தோய்தல் எனும் தலைப்பில் உரையாற்றிய புஸ்பராணி அவர்கள் தனது நினைவுகளிலும் தோய்ந்து கொண்டிருந்தார். எஸ். பொ வின் வட்டார மொழி வழக்குகளை மிக சுவாரசியமாக இரசித்து மகிழ்ந்ததாக குறிப்பிட்டார். நனவிடை தோய்தல் எனும் நாவலில் உள்ள பல்வேறு சொற்களையும், சம்பவங்களையும் வாசித்து பார்வையாளர்களையும் மகிழ்வித்தார்.

நான் சிறுபராயத்திலேயே பாடப் புத்தகத்திலே வரும் கதைகளை தேடித் தேடி படிக்கும் ஆவல் உள்ளவனாக இருந்தவன். அவ்வாறாக நான் படித்த கதைகளெல்லாம் எஸ்.பொ அவர்கள் தான் எழுதியது என்பதை பல ஆண்டுகளின் பிற்பாடே என்னால் அறிய முடிந்தது. எஸ்.பொ ஒரு இலக்கிய துரோணாச்சாரியார். நான் அவருக்கு ஏகலைவனாக இருந்தேன். பேட்டிகாணும் போதும் அவருடன் விடுதலைப் புலிகள் குறித்து பேசியபோதும் நிகழ்ந்த முரண்பாடுகள் பலவற்றையும் ஷோபாசக்தி தனது உரையில் குறிப்பிட்டார். இறுதியாக உரையாற்றிய மனோ அவர்கள் எஸ். பொ வின் நூல்களை தொடர்ந்து நாம் படிக்க வேண்டும். அவரது நூல்களை வாசிப்பு மனநிலை விவாதத்திலும் நாம் எடுத்து விவாதிக்கவேண்டும். எனவும் வலியுறுத்தினார்.

நேரம் போதாமையால் கலந்துரையாடலில் பலராலும் பங்கு பற்ற முடியாது போனது. இருப்பினும் தோழர் வன்னிய சிங்கம் அவர்கள் எஸ்.பொ மக்கள் சார்ந்த அரசியல் நிலைப்பாடு இல்லாதவர். இலக்கியத்தில் ஆளுமையுள்ளவராக இருப்பினும் மக்கள் நலன் சார்ந்து சிந்திப்பது மிக அவசியமானது என்றும் குறிப்பிட்டார். இந்த நிகழ்விற்கு பல சிங்கள நண்பர்கள் வந்திருந்தார்கள். அவர்களுக்கான மொழி பெயர்ப்பு தொகுப்பை சரவணன் அவர்கள் வழங்கினார். சரவணன் அவர்களுக்கும் நிகழ்விற்கு வருகை தந்தவர்களுக்கும், உரையாற்றிய அனைவருக்கும் தலித் சமூக மேம்பாட்டு முன்னணி தனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.









# ‘சாதியமும் சில தின்னுட்டுப் பேண்டான்களும்’

விதைத்து, விளைவித்து, அறுத்துத்
தரவேண்டும் நான்.
சொகுசாய் நிழலில் உட்காந்து
தின்பாய் நீ.


தின்றுவிட்டு தினுசு தினுசாய்
பேண்டழிப்பாய் நீ.
திரும்பவும் பேள வசதியாய்
பேண்டதை அள்ள வேண்டும் நான்.

சாக்கடை தள்ளி, குப்பை வாரி,
துவைத்து மயிர் சிரைத்து,
பிணமெரித்து, புதைத்து
இன்ன பிறவும் செய்து கொண்டு
நானிருந்தால்,
அழகாய் பரிபாலனம்
பண்ணிக் கொண்டிருப்பாய்

கூடுதலாய்,
உன் வீட்டு கொழுப்பு பிண்டங்கள்
தீர்த்து வைக்காத தினவை
வதங்கிய என் பெண்களை நொட்டி
தீர்த்துக் கொண்டு போவாய்.

இதெல்லாவற்றையும்
என் சாதியைச் சொல்லித்தான்
சாதித்துக் கொண்டிருக்கிறாய்
என்றாலும்,
உன் புனித பீடமொன்றில்
நிர்வாணியாய் வந்து நின்ற
நான் சக்கிலியன் எனும் போது
என் குரலில் தான்
சாதியம் என்ற ஒன்று
தட்டுப் படுகிறதோ உனக்கு.

ம.மதிவண்ணன்- (நமக்கிடையிலான தொலைவு)



# "பெரியார் களஞ்சியத்தில்"

"எனக்கு கடவுளைப் பற்றியோ மதத்தைப் பற்றியோ சாத்திரத்தைப் பற்றியோ அக்கறையில்லை. ஆனால் கெடுதியை நீக்கவும், கொடுமைகளைப் போக்கவும் முயற்சி செய்கிறபோது "கடவுள்தான் சாதிகளை ஏற்படுத்தினார். அதன்படி நடக்கத்தான் வேண்டும்" என்றால் அந்தக் கடவுள் எத்துணைப் பெரிய கடவுளாயிருந்தாலும் அதைச் சுட்டுப் பொசுக்க வேண்டாமா என்றே உங்களைக் கேட்கிறேன். இந்த நிலைமையிலேயே நாம் எல்லாவற்றையும் தாக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் எங்கட்கு அவற்றில் என்ன வேலை? எவன் அவற்றை வைத்துக் கொண்டு பிழைத்தால் என்ன? நம்மைத் தாழ்த்தி அமுக்கிக் கொடுமைப்படுத்த அந்த மதம் சாஸ்திரம் கடவுள் ஆகிய மூன்றையும் கொண்டுவந்தால் நான் ஏன் சம்மதிப்பேன்? இதனாலேயே நாம் எல்லோருக்கும் அதிலும் பார்ப்பாருக்கும் விரோதிகளாய்ப் போய்விட்டோம். இவற்றால் ஏமாற்றிக் கொண்டு வந்த கூட்டத்தாருக்கு விரோதிகளானோம். பிறப்பில் வித்தியாசம் காட்டக்கூடாது. ஒருவனை ஒருவன் அடக்கியாளக்கூடாது. என்று சொல்வதால் ஒன்றும் முழுகிப்போய்விடாது. யோக்கியமான மதமும் யோக்கியமான கடவுளுமாயிருந்தால் இதனாலெல்லாம் போய்விடாது. அப்படியே போய்விடக்கூடிய கடவுளால் என்ன நஷ்டம் வந்துவிடும்?"

**தமிழ் திரைப்படங்களின் பிரபல்யமான இயக்குனர்களில் கணிசமானவர்கள் சமுதாயத்தின் விளிம்பு நிலை மக்களை அவமதிக்கும் வகையில் காட்சிப்படுத்துவதும், அம்மக்கள் குறித்த இழிவான கருத்துக்களை பரப்புவதிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக தலித்துக்கள், திருநங்கைகள் பற்றிய உரையாடல்களும், காட்சிப்படுத்தல்களும் அம்மக்களை கேவலப்படுத்தும் நோக்கத்துடன் திட்டமிட்டே மேற்கொள்ளப் பட்டுவருகின்றது. அந்தவகையில் அண்மையில் வெளியான சங்கர் இயக்கிய 'ஐ' திரைப்படமும் திருநங்கைகளை அவமதிக்கும் வகையில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. அதை நாம் வன்மையாக கண்டிப்பதோடு. லிவிங் ஸ்மைல் வித்யா அவர்களின் இயக்குனர் சங்கருக்கு எதிரான கண்டன அறிக்கையின் சிறு பகுதியை 'வடு' வில் மீழ்பதிவு செய்கின்றோம்.**

# இயக்குநர் சங்கருக்கு...

.....திரையிலும், சுவரொட்டிகளிலும் மட்டுமே கண்ட ஒரு அழகியை, அவள் அழகி என்பதால் மட்டுமே ஒரு ஆணழகன் காதலிக்கிறார். அது உண்மையான, நியாயமான, கல்மிஷம் இல்லாத காதலாகிறது. குற்றவுணர்வாலும், பரிதாபத்தாலும் அந்த அழகியும், ஆணழகனைப் பரிசுத்தமாகக் காதலிக்க முடிகிறது. ஆனால், ஒரு திருநங்கையின் காதல் உணர்வு மட்டும் நாயகனாலும், நண்பனாலும், நாயகியாலும், படத்தில் வரும் விளம்பரப் பட இயக்குநராலும் அருவருப்பாகவே பார்க்கப்படுகிறது. இது நியாயமா?

‘9’ என்ற அறை எண்ணைக் காட்டிப் பின் ஓஜாஸைக் காட்டிய உங்கள் அரதப் பழசான, அருவருப்பான விளையாட்டை எண்ணி என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதே ‘9’ என்ற சொல்லைத்தான் எந்த அற்பனும் எங்களைச் சிறுமைப்படுத்தப் பேராயுதமாகப் பயன்படுத்துகிறான்.

‘இப்படத்தில் எந்த மிருகமும் துன்புறுத்தப்படவில்லை’ என்ற சட்டபூர்வ அறிவிப்புடன் தொடங்கும் படத்தில், கிடைக்கும் ஒரு வாய்ப்பைக்கூட விடாமல் பாலியல் சிறுபான்மையினர் முதல், மாற்றுத் திறனாளிகள்வரை காயப்படுத்த தங்களுக்குக் கட்டற்ற சுதந்திரம் அளித்திருக்கிறது நமது தணிக்கைக் குழு. மிருகங்களுக்கு மனமிரங்கி மனிதர்களான எங்களை ஏலியன்களாகப் பார்க்கும் அதன் தாராள மனதைக் கண்டிக்காமல் உங்களைக் கேள்வி கேட்டு என்ன பயன்?



வாசிப்பும், பகுத்தறிவும் கொண்ட நடிகரென நவீன இலக்கிய வாதிகளும் கொண்டாடும் நடிகர் கமல், ‘பொட்டை’ என்னும் சொல்லை வெகு ஆண்மையோடு தமது பல படங்களில் பயன்படுத்தியுள்ளார், அதற்கும் மேலே, ‘வேட்டையாடு, விளையாடு’ படத்தில் திருநங்கைகளையும், தன்பால் ஈர்ப்பினரையும் மலினப்படுத்தியிருக்கிறார் எனும்போது சந்தானத்தையும் விக்ரமையும் மட்டும் என்ன சொல்ல?

தமிழ்த் திரையுலக இயக்குநர்கள், நடிகர்கள், நடிகைகள், காமெடியன்கள் நினைப்பதுபோல, ஆண் பராக்கிரமசாலிகளும், பெண்களும் மட்டுமே உங்கள் ரசிகர்கள் அல்ல. உங்களால் அன்னியப்படுத்தப்பட்டு, மலினப்படுத்தப்படும் நாங்களும் உங்கள் ரசிகர் பட்டாளங்களின் ஒரு பகுதிதான்.

நாங்களும் படங்கள் பார்க்கிறோம். ரசிக்கிறோம், சிரிக்கிறோம், நீங்கள் மலினப்படுத்துவதையும் கடந்து எங்கள் உலகத்துக்குள்ளும் உங்களில் பலருக்கும் ரசிகைகள் இருக்கிறார்கள். அதற்காக எங்கள் சோற்றில் உப்பில்லை என்றுமட்டும் நினைத்துவிடாதீர்கள். ●

இப்படிக்கு

**லிவிங் ஸ்மைல் வித்யா**

# தேசியமும்...,
# சாதியும்.....!

**-தேவதாசன்-**

காலணித்துவ எதிர்ப்பு சக்தியாக பிறந்ததுதான் 'தேசியம்'. அந்த தேசியமானது ஒவ்வொரு தேசங்களிலும் வெவ்வேறு விதமாக வளர்க்கப்பட்டு வருகிறது. அதுவும் தமிழ் நாட்டில் வளர்க்கப்பட்டு வரும் தேசியம் என்பது மிக விநோதமானது. இந்திய தேசத்திலிருந்து விடுபட்ட திராவிட சிந்தனைக்கு, கட்சி-அரசியல் வடிவத்தை அறிஞர் அண்ணா அவர்கள் தொடக்கிவைத்தார். அதுவே தி.மு.க. அ.தி.மு.க. ம.தி.மு.க. தே.மு.தி.க என திராவிட அடையாளங்களுடன் நீண்டுகொண்டே இருந்தது. நாங்கள் தமிழர்கள். தமிழர்களின் நலனுக்கான கட்சிகள் எதுவுமே இல்லை என 'நாம் தழிர் கட்சி' ஒன்றை உருவாக்கினார் சீமான் அவர்கள். இவர் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, இலங்கைத் தமிழர்களையும் விடுவிப்பதற்காக ஒரு தேசியத்தை வளர்த்து வருகின்றார். இக்கட்சி தமிழ் தேசியத்தின் உச்சமாக தமிழ்நாடு தமிழர்களுக்கே என பேசிக்கொண்டாலும் ஜெயலலிதாவுக்கு முன்னால் கைகட்டி வாய் பொத்தியே தனது பணியை செய்து வருகிறது. இக்கட்சிக்கு சாதியவிடுதலை, பெண்விடுதலை, வர்க்கவிடுதலை போன்ற விடயங்களில் துளியும் அக்கறை இருப்பதாக தெரியவில்லை. இருந்தாலும் நாம் தமிழர் கட்சியின் தலைவரான சீமான் அவர்கள் மகிந்த ராஜபக்ஷ மட்டுமே உலகத் தமிழர்களின் முதல் எதிரி என தனது போராட்டத்தை முன்னெடுத்து வந்தார். இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்த தமிழர் சிலரின் பொருளாதார முதலீட்டில் அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில்தான் நாம் தமிழர் கட்சி செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசிய உணர்வுடன் தமிழ் நாட்டில் பல்வேறு கட்சிகள் இருப்பதாக கூறிக்கொண்டாலும், அங்கு தினந்தோறும் பல தலித் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்பட்டு துன்பப்படுவதும், சாதிமாறி காதல் திருமணம் செய்பவர்கள் திட்டமிட்டு கொல்லப்படுவதும் சாதாரண நிகழ்வாகவே தொடர்கிறது. இக்கொடுமைகளை தமிழ் தேசியக்கட்சிகள் எதுவுமே கண்டு கொள்வதில்லை. குறைந்தபட்சம் திருமாவளவன் அவர்களின் விடுதலைச் சிறுத்தைகள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற போதிலும் மற்றய தமிழ் தேசியக்கட்சிகள் திருமாவளவனுக்கு ஆதரவாக இருப்பதில்லை. அதேவேளை இலங்கை தமிழர்களுக்கு ஒரு பிரச்சனையென்றால் திராவிட இயக்கம் உட்பட அனைவருமே போட்டி போட்டு கொதித்தெழுந்து போராட்டம் நடாத்துகின்றனர். ஆனால் சாதிய சமூக ஒடுக்குமுறை விடயத்தில் எல்லோரும் ஒழிந்து கொண்டு கண்டும் காணாமல் மறைந்து விடுகின்றனர். இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் தமிழ் தேசியக் கட்சிகள் ஈழத்தில் சாதியமே இல்லை என்பதாக எந்த அறிதலுமின்றி தமிழ்நாட்டு மக்களுக்கு பொய்யுரைத்து வருகின்றனர். இந்த விடயத்தில் விடுதலைச் சிறுத்தைகள் ஓரளவிற்கு எம்மத்தியில் நிலவும் சாதியம் குறித்த அறிதல் உள்ளவர்களாக தெரிகின்றது.

கடந்த 2014 மார்கழி மாதம் நான் தமிழ் நாட்டில் நின்றபோதே இவ்வாறான அனுபவத்தை பெறக்கூடியதாக இருந்தது. பலதரப்பட்ட தலித் விடுதலை அமைப்புக்களையும், இடதுசாரிய கண்ணோட்டத்துடனான தோழர்களையும் சந்தித்து உரையாடினேன். டாக்டர் அம்பேத்கர் தலைமையை மட்டுமே ஏற்றுக்கொண்டு அவர் வழியில் பௌத்த மதத்தைத் தழுவி பௌத்த அறநெறியில் தலித் மக்களுக்கான போராட்டத்தை முன்னெடுத்துவரும் பல தோழர்களை சந்தித்து பேசக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களோடு நீண்டநேரம் இலங்கை இந்திய சாதியம் பற்றி விரிவாக பேசினேன். இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் தொடர்ந்து கட்டிக்காத்துவரும் சாதிய கட்டமைப்பு பற்றி என்னால் இயன்ற அளவிற்கு அவர்களுக்கு தெளிவு படுத்தினேன். சில தோழர்களுக்கு இலங்கைத் தமிழர் மத்தியில் நிலவும் சாதியம் குறித்த அறிதல் இருப்பினும் பலருக்கு நான் பேசிய விடயங்கள் வியப்பாகவே இருந்தது. பௌத்த சிந்தனையை பேணுவதும் அதனூடாக சாதிய ஒடுக்குமுறைகளை எதிர்கொள்ளும் போக்குடைய பலரையும் சந்தித்து உரையாடும் வாய்ப்பு கிடைத்தது.

தேசிய பற்றாளர்கள், பெரியாரிஸ்டுகள், தலித் விடுதலையாளர்கள், பௌத்த சிந்தனையை முன்வைத்து செயல்படுபவர்கள் என பலர் வெவ்வேறு வழிமுறைகளில் செயல்பட்டு வருகின்ற போதும் சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக இவர்களை ஒன்றிணைக்கும் சிந்தனை முறையும் அவசியம். இந்திய சாதியக் கொடுமைகளுக்கு எதிராக போராடிய பல களப்பணியாளர்களை சந்தித்து உரையாடினேன். அந்த அனுபவம் எமது தொடர்ச்சியான பணிகளுக்கு மிக பயன் உள்ளதாக அமைந்தது. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக சர்வேதேச ஆதரவு சக்திகளை இணைத்து செயல்பட வேண்டும் என்ற கருத்தும் பலர் மத்தியில் மேலோங்கியிருப்பதை என்னால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சாதிய விடுதலையை வென்றெடுக்க வேண்டுமென்ற எண்ணம் நெருப்பாக ஒவ்வொருவருக்குள்ளும் இருந்தாலும் அவர்களுடைய பாதைகள் வெவ்வேறானதாக இருப்பதையும் நான் உணராமல் இல்லை. தமிழ் தேசியம் மதம் இனம் கடந்து சாதிய சமூக ஒடுக்கு முறைக்கு எதிரான சக்திகளுடன் இணைந்து எமது பணியைத் தொடருவோம். ●

# வடு

## வாசகர்களுக்கு...

வடு பத்திரிகைக்கான
கதை, கவிதை, கட்டுரை
மற்றும் தகவல்கள்
போன்ற
ஆக்கங்களையும்
விமர்சனங்களையும்
உங்களிடம் இருந்து
எதிர்பார்க்கின்றோம்.


தொடர்புகட்கு:
இலங்கைக்கு
sonithaso87@gmail.com.
புலம்பெயர் நாடுகளுககு:
"VADU"
F.D.S.D.S
70, Square des bauves
95140 GARGES LES GONESSE
FRANCE
VADU.WORLD@hotmail.fr


தலித் சமூக மேம்பாட்டு
முன்னணியின் இணையத்தள
முகவரி
**www.Thuuu.net**


இலங்கை தலித் சமூக
மேம்பாட்டு முன்னணியின்
'வடு' வெளியீட்டின்
நிர்வாக ஆசிரியர்
**து. தசோனியா**
அச்சுவேலி மேற்கு, யாழ்ப்பாணம்


**சாதிய 'வடு'**
**அகற்றிடத் துணிந்த**
**நெடும் பயணம்**
**இது..!**

# "பொய்யைத் தலைக்குள் கொண்டு திரிந்தால் என்னால் எழுதமுடியாது."



" நான் உணர்வு பூர்வமாக எழுதுபவன். அநேகமாக கோட்பாடுகளை வைத்துக்கொண்டு எழுதியவனே அல்ல. கூடுதலாக உள்ளுணர்வுகளை வைத்துக்கொண்டு எழுதுபவன். அந்த உள்ளுணர்வு மிக மென்மையான மனித உணர்வுகளுடன் சம்பந்தப்பட்டது. என்னுடைய ஒரேயொரு வாரிசு மித்ராதான். அவன் ஒரு கவிஞனாகவே இருந்து என்னுடன் வாழ்ந்தவன். அவனை நான் இழந்த தவிப்பு உங்கள் ஒருவருக்கும் தெரியாது. என்னுடைய அந்த ஆதரவு நிலைப்பாடு என்னுடைய மகன்மீது கொண்டுள்ள பாசம் மட்டுந்தான். இது உண்மை. நான் ஒருபோதும் பொய் சொல்பவனல்ல. பொய்யைத் தலைக்குள் கொண்டு திரிந்தால் என்னால் எழுதமுடியாது."

- எஸ்.பொ
கற்சுறாவின் நேர்காணலின்போது



"சில விஷயங்களில் நாம் எல்லோருமே பிழையான அனுமானங்களைக் கொண்டு விடுகிறோம். கடந்தகால அரசியல் -அதற்கான இலக்கிய அநுபவங்கள் எமக்குப் போதிக்கும் பாடங்களை நாம் மறந்து விடுகிறோம். வேண்டிய வேளைகளில் அவைகள் எமக்கு உதவிக்கு வருவதில்லை. வாழ்க்கையையும் தத்துவங்களையும் நாம் தனித்தனியேதான் வைத்திருக்கப் பார்க்கிறோம். சில வேளைகளில் நாம் விரும்பும் தத்துவத்தினை மக்கள்மேல் அளவுக்கு அப்பால் பிரயோகிக்கவும் முற்படுகிறோம்."

- கே. டானியல்
அ. மார்க்ஸ் அவர்களின் "கே. டானியல் கடிதங்கள்" தொகுப்பில் இருந்து